Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை ரூபா 7.00

நமது
# ஈழநாடு
தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு:2035 கார்த்திகை 04 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 ஷவ்வால்06 (19.11.2004) வெள்ளிக்கிழமை இதழ்:49

உந்துருளிகளை பழுது பார்க்கவும்
சேவிஸ் செய்யவும் நீங்கள்
நாடவேண்டிய ஒரே இடம்
இரத்தினம் ஊர்திச் சேவைத்தளம்
30, 32, சிராம்பியடி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்
காலை 7.00 மணி முதல் மாலை 5.30 வரை
(ஞாயிறு விடுமுறை) குறித்த நேரத்தில்
சேவிஸ் செய்து தரப்படும்.

★ ஒய்வூதியத் தொகை அதிகரிப்பு ★ வேலைநேரம் 9 மணி நேரமாகிறது

★ அத்தியாவசியப் பொருட்களுக்கான வற் வரி 5 வீதமாகக் குறைப்பு

# அரச ஊழியருக்கு 40 வீத சம்பள உயர்வு

# நிதி நெருக்கடியால் உடன் கிடைக்காதாம்!


## வரவு-செலவுத்திட்ட யோசனையில் நிதியமைச்சர்!



(கொழும்பு)

அரச ஊழியர்களுக்கு 40 வீத சம்பள உயர்வு ஒய்வூதியத் தொகை அதிகரிப்பு மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் மீதான வரி நீக்கம் போன்ற சலுகைகளுடன் அரசாங்க ஊழியர்களின் நாளாந்தக் கடமை நேரத்தை ஒரு மணித்தியாலத்தால் அதிகரிக்கவும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் முதலாவது வரவு செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ளது. ஆயினும் நிதி நெருக்கடியால் சம்பள உயர்வின் ஒரு பகுதியே அடுத்த ஆண்டில் நடைமுறைப்படுத்தப்படும் என்று நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகமவினால் நேற்று தாக்கல் செய்யப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் – சூதாட்ட வரி ரூபா 10 ஆயிரம் முதல் ரூபா 25 ஆயிரம் வரை அதிகரிக்கப்படவுள்ளது. கசிறோ மீதான வரி 12 மில்லியன் முதல் 50 மில்லியன் வரை (12 ஆம் பக்கம் பார்க்க)



## பொலனறுவ - கதுருவெல பகுதியில்

# இராணுவ புலனாய்வாளர்கள் இருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொலை!

## ஒரே பார்வையில் 'பட்ஜெட்'

| | மில்லியன் ரூபா |
|---|---|
| மொத்த செலவினம் | – 485300 |
| உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கு | – 55479 |
| நலன்புரித் திட்டங்களுக்கு | – 32522 |

# இராணுவ புலனாய்வாளர்கள் இருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொலை!

(மட்டக்களப்பு)

பொலனறுவ மாவட்டத்திலுள்ள கதுருவெல நகரில் - ரயில் நிலையத்துக்கருகே நேற்றுப் பிற்பகல் இராணுவ புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த இராணுவ அதிகாரி ஒருவரும், தகவல் கொடுப்பவர் ஒருவரும் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

மோட்டார் சைக்கிள் ஒன்றில் முஸ்லிம் குடியிருப்புப் பகுதி நோக்கிச் சென்றுகொண்டிருந்த இராணுவ புலனாய்வு அதிகாரி மற்றும் தகவல் கொடுக்கும் நபர் ஆகியோர் மீது நேற்றுப் பிற்பகல் 1.30 மணியளவில் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இன்னொரு மோட்டார் சைக்கிளில வந்த இரண்டு பேர், கைத்துப்பாக்கியால் சுட்டதில், இராணுவ புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த லான்ஸ் கோப்ரல் வசந்த எனப்படும் அஜித் தசநாயக்க அந்த இடத்திலேயே உயிரிழந்தார். இவரது தலை மற்றும் நெஞ்சுப் பகுதிகளில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்பட்டன.

இதேவேளை இவருடன் பயணம் செய்த இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்கு தகவல் கொடுக்கும் உளவாளியான வசந்தநாயகம் பிரபாகரன் என்ற இளைஞர் இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த நிலையில் பொலனறுவ ஆதார வைத்திய சாலைக்குக் கொண்டுசெல்லப்பட்ட போதும் அங்கு உயிரிழந்தார்.

மின்னேரியா இராணுவ முகாமிலிருந்து தொலைபேசிக் கட்டணத்தைச் செலுத்துவதற்காக கதுருவெலவுக்கு மோட்டார் சைக்கிளில் மேற்படி இராணுவ அதிகாரி சென்றுகொண்டிருந்த போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இந்தத் தாக்குதலை நடத்தியவர்கள் மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றதாகக் கிடைத்த தகவலையடுத்து பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து தேடுதல் வேட்டை நடத்தி இரு தமிழ் இளைஞர்களைக் கைது செய்தனர்.

இவர்களில் ஒருவர் கிளிநொச்சியையும், மற்றையவர் ஏறாவூரையும் சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர். இவர்களிடமிருந்து எந்த ஆயுதங்களும் கைப்பற்றப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இந்தச் சம்பவம் தொடர்பாக நேற்றுமாலை இராணுவத் தலைமையகம் வெளியிட்ட

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அரசியற்துறை அலுவலகம் மீது ஆரையம்பதியில் கிரனேட் வீச்சு!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் - ஆரையம்பதி பிரதேசத்திலுள்ள விடுதலைப் புலிகளின் அரசியற்துறை அலுவலகம் மீது நேற்று அதிகாலை கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலேயே இந்தத் தாக்குதல்

(12 ஆம் பக்கம் பார்க்க)

எமது வீர சுதந்திர வரலாறு மாவீரர்களின் இரத்தத்தாலும் எழுதப்பட்டிருக்கிறது.

வே.பிரபாகரன் – தமிழீழத் தேசியத் தலைவர்

| | மில்லியன் ரூபா |
|---|---|
| மொத்த செலவினம் | – 485300 |
| உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கு | – 55479 |
| நலன்புரித் திட்டங்களுக்கு | – 32522 |
| விவசாயத்துக்கு | – 26561 |
| கல்வி | -54280 |
| சுகாதாரம் | – 40408 |
| மொத்த வருமானம் | – 312422 |
| பற்றாக்குறை | – 172873 |

# புலிகள் இயக்கப் போராளி ஒருவர் வாழைச்சேனையில் சுட்டுக் கொலை!

## நேற்றுமுன்தினம் இரவு சம்பவம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் - வாழைச்சேனை பிரதேசத்திலுள்ள கண்ணன் கிராமத்தில் விடுதலைப் புலிகளின் போராளியான வர்ணரூபன் எனப்படும் மகேஸ்வரன் றொசான்குமார் நேற்றுமுன்தினமிரவு இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

கண்ணன் கிராமம் முருகன் கோவில் வீதியில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்ட இவரது சடலம், நேற்றுக் காலை உறவினர்களால் கணெடுக்கப்பட்டது.

கொல்லப்பட்டவர் தமது வீட்டுக்கு வந்து வெளியே சென்றிருந்தபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

அரசியல் வேலைத் திட்டத்தில் ஈடுபட்டிருந்த இவர்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர்பாக விடுதலைப் புலிகள் தெரிவித்த புகாரையடுத்து இலங்கை போர்நிறுத்தக் கணகாணிப்புக் (12 ஆம் பக்கம் பார்க்க)





இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291

email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.





EXPOAIR

Your friend in the skies...

# இணைந்த சேவை சார்ந்த அலுவலர்களுக்கான வருடாந்த இடமாற்றப் பட்டியல் வெளியாகியது!

அரசாங்க ஊழியர்களின் இணைந்தசேவை சார்ந்த அலுவலர்களின் இடமாற்றப்பட்டியல் இணைந்த சேவைகள் பணிப்பாளரினால் வெளியிடப்பட்டுள்ளது. இந்த இடமாற்றங்கள் ஜனவரி முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரவுள்ளது.

பொது எழுதுநர் சேவைகள் இடமாற்ற மேன்முறையீடுகளை இந்த மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கமுடியும் என்று இணைந்த சேவைகளின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இடமாற்றம் பெறுவோரின் பெயர் விபரங்கள் வருமாறு :

வரலட்சுமி திரிபுரபவன் - யாழ். மாவட்ட செயலகத்திலிருந்து யாழ்.மாவட்ட தொழில் திணைக்களத்துக்கும், தெய்வநாயகி ஸ்கந்தராஜா, யாழ்.மாவட்ட செயலகத்திலிருந்து யாழ்.பொலிஸ் நிலையத்துக்கும், ஆறுமுகம் சத்தியமூர்த்தி- யாழ்.மாவட்ட செயலகத்திலிருந்து வவுனியா மாவட்ட செயலகத்துக்கும், எஸ்.சாந்தகுமார் - யாழ். பிரதேச செயலகத்திலிருந்து சங்கானை பிரதேச செயலகத்துக்கும்,

உமையாள் சுபராஜா - யாழ். பிரதேச செயலகத்திலிருந்து நல்லூர் பிரதேச செயலகத்துக்கும், கௌரி ஜெயக்குமார் - காரைநகர் பிரதேச செயலகத்திலிருந்து சங்கானை பிரதேச செயலகத்துக்கும், என்.சிவகுமாரன் - காரைநகர் பிரதேச செயலகத்திலிருந்து வவுனியா மாவட்ட செயலகத்துக்கும்,

பொன்மதி சண்முகலிங்கம் - வேலணை பிரதேச செயலகத்திலிருந்து வவுனியா பொலிஸ் திணைகள சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்துக்கும், சுப்பிரமணியம் பாக்கியலட்சுமி சங்கானை பிரதேச செயலகத்திலிருந்து காரைநகர் பிரதேச செயலகத்துக்கும், துரைசிங்கம் பிரகாசன் - சங்கானை பிரதேச செயலகத்திலிருந்து காரைநகர் பிரதேச செயலகத்துக்கும், கந்தசாமி பத்மசாமி - சங்கானை பிரதேச செயலகத்திலிருந்து கோப்பாய் பிரதேச செயலகத்துக்கும்,

கந்தையா லிங்கேஸ்வரன் - சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திலிருந்து உடுவில் பிரதேச செயலகத்துக்கும், யோன் ஜெமினா அந்தோனிப்பிள்ளை - சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திலிருந்து ஆட்பதிவுத் திணைக்களத்துக்கும், ஞானசேகரம்பிள்ளை லோகநாதன்- தெல்லிப்பளை பிரதேச செயலகத்திலிருந்து காங்கேசன்துறை பொலிஸ் திணைக்களம், பொலிஸ் அதிகாரி காரியாலயத்துக்கும்,

ஏ.கிருஷ்ணகுமார் - தெல்லிப்பளை பிரதேச செயலகத்திலிருந்து சங்கானை பிரதேச செயலகத்துக்கும், ஆறுமுகநாதன் ரூபகாந்தன் - கோப்பாய் பிரதேச செயலகத்திலிருந்து பேராதனை விவசாயத் திணைக்களத்துக்கும்,

திருமதி சறோஜினிதேவி இரவீந்திரன் - கோப்பாய் பிரதேச செயலகத்திலிருந்து மாவட்ட காணி அலுவலகம், பதிவாளர் திணைக்களத்துக்கும், அருளானந்தன் காந்தரூபன் - கோப்பாய் பிரதேச செயலகத்திலிருந்து தெல்லிப்பளை பிரதேசசெயலகத்துக்கும்,

திருமதி விஜயலட்சுமி பாலசுப்பிரமணியம் - கோப்பாய் பிரதேச செயலகத் திலிருந்து யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்துக்கும், வை. அருட்செல்வம் - கோப்பாய் பிரதேச செயலகத்திலி ருந்து நல்லூர் பிரரதேச செயலகத் துக்கும், கந்தையா தபேந்திரம் - சாவகச்சேரி பிரதேச செயலகத்தி லிருந்து பருத்தித்துறை பிரதேச செயலகத் துக்கும், வி.பாலகுமார் - பருத்தித் துறை பிரதேச செயலகத்திலிருந்து சாவகச்சேரி பிரதேச செயலகத்துக்கும்,

கருணாவதி ரவிச்சந்திரன் - பருத்தித்துறை பிரதேச செயலகத்திலிருந்து கோப்பாய் பிரதேச செயலகத்துக்கும், எஸ்.தெய்வேந்திரன் - உடுவில் பிரதேச செயலகத்திலிருந்து இந்து கலாசார அலுவல்கள் அமைச்சுக்கும், சிவசோதி தர்மராஜசிங்கம் - உடுவில் பிரதேச செயலகத்திலிருந்து தெல்லிபபளை பிரதேச செயலகத்துக்கும், குகராஜன் கேதினி - நல்லூர் பிரதேச செயலகத் திலிருந்து கோப்பாய் பிரதேச செயலகத்துக்கும், ராஜேஸ்வரி ரத்தினராஜா - நல்லூர் பிரதேச செயலகத்திலிருந்து யாழ்ப்பாணம் பிர தேச செயலகத்துக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை - அலுவலக பணியாளர் சேவையிலுள்ளவர்களின் இடமாற்ற விபரமும் வெளியிடப்பட்டுள்ளது.

டி.தியாகராஜா - வடமராட்சி பிரதேச செயலகத்திலிருந்து கரவெட்டி பிரதேச செயலகத்துக்கும், எம். குமாரசாமி - கரவெட்டி பிரதேச செயலகத்திலிருந்து வடமராட்சி பிரதேச செயலகத்துக்கும், ஜீ.புவனேஸ்வரன் ஊர்காவற்துறை பிரதேச செயலகத்திலிருந்து யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்துக்கும், எஸ். அழகேந்திரம் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்திலிருந்து ஊர்காவற்துறை பிரதேச செயலகத்துக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

## 11 இலட்சத்து 55 ஆயிரம் ரூபா செலவில் தென்மராட்சியில் அபிவிருத்தி திட்டம்!

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின்கீழ் தென்மராட்சி பிரதேசத்தில் 11 இலட்சத்து 55 ஆயிரம் ரூபா செலவில் அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் 9 இலட்சம் ரூபாவும், பிராந்திய உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சினால் 2 இலட்சத்து 55 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டு வேலைத் திட்டங்கள் நடைபெற்று வருகிறன.

தென்மராட்சி கல்வி வலயத் திற்குட்பட்ட பின்வரும் பாடசாலைகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

யா/சத்தியம்மன் தமிழ் மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்திற்கு ரூபா 50,000 உம்.

நாவற்குழி மகாவித்தியாலய நூலக அபிவிருத்திக்கு ரூபா 1,50,000 உம்.

கைதடி - நாவற்குழி அ.த.க. பாடசாலை வகுப்பறை கட்டடத்திற்கு ரூபா 1,00000 உம்.

சரசாலை சரஸ்வதி வித்தியாலயத்திற்கு உபகரண கொள்வனவுக்கு ரூபா 1,00000 உம்.

கைதடி கலைவாணி வித்தியாலயம் பாடசாலை உபகரண கொள்வனவுக்கு ரூபா 50,000 உம்.

மட்டுவில் கமலாசினி வித்தியாலயம் வேலை அபிவிருத்திக்கு ரூபா 1,00000 உம்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி போட்டோ பிரதி இயந்திரக் கொள்வனவுக்கு ரூபா 75,000 உம்.

சரசாலை சரஸ்வதி வித்தியாலய வகுப்பறைக் கட்டடத்திற்கு ரூபா 50,000 உம்.

தென்மராட்சி கல்வி வலயத்திற்கான விளையாட்டு உபகரணக் கொள்வனவுக்கு ரூபா 50,000 உம்.

உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்துக்கு இசைக்கருவி கொள்வனவுக்கு ரூபா 75,000 உம்.

வரணி சைவப்பிரகாசா வித்தியாலயம் மின் இணைப்பு வேலைகளுக்கு ரூபா 25,000 உம்.

வரணி அ.த.க.பாடசாலை கிணறு அமைப்பதற்கு ரூபா 50,000 உம்.

வரணி இடைக்குறிச்சி மகா வித்தியாலயம் மின் உபகரண வேலைக்கு ரூபா 25,000 உம்.

நாவற்காடு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் கூரை அமைப்பதற்கு ரூபா 50,000 உம் ஒதுக்கப்பட்டுள்ளது.

மிருசுவில் விநாயகர் சனசமூக நிலையம், மற்றும் பாலர் பாடசாலைக்கு உபகரணம் வாங்குவதற்கு ரூபா 25,000 உம்.

முன்பள்ளி கற்றல் உபகரணங்களுக்கு ரூபா 5,000 உம்.

இடைக்குறிச்சி சனசமூக நிலையதுக்கான உபகரணக் கொள்வனவுக்கு ரூபா 15,000 உம்.

வரணி கரம்பகுறிச்சி முன்பள்ளி உபகரண கொள்வனவுக்கு ரூபா 25,000 உம்.

மீசாலை மேற்கு முன்பள்ளி உபகரண கொள்வனவுக்கு ரூபா 25,000 உம்.

மட்டுவில் அம்பாள் சனசமூக நிலையக் கட்டடத்திற்கு ரூபா 50,000 உம்.

20 சனசமூக நிலையங்களுக்கான புத்தகக் கொள்வனவுக்கு ரூபா 50,000 உம். ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சங்கத்தானை நாமகள் பாலர் பாடசாலைக்கு கதிரைகள் கொள்வனவிற்கு ரூபா 20,000 உம்.

சாவகச்சேரி தென்னிந்தியத் திருச்சபை பாலர் பாடசாலை விளையாட்டு உபகரண கொள்வனவுக்கு ரூபா 40,000 உம். ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி மூன்று திணைக்களங்களும் திட்டவரைபுகளை விரைவில் நிறைவேற்றக்கூடிய வகையில் நடவடிக்கை எடுக்குமாறு தென்மராட்சி பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (29)

## சுவிஸ் திரைப்படத்தின் நாளைய காட்சிகள்



Escape to paradise



Utopia Bluse



Black for more

யாழ். பல்கலைக் கழகத்தில் நடைபெற்றுவரும் சுவிஸ் திரைப் படக்காட்சித் தொடரில் நாளை முற்பகல் 10-30 மணிக்கு இயக்குநர் வின்சன்ட் பிளஸ்ஸின் **Black for more** என்னும் திரைப்படம் காண்பிக்கப்படவுள்ளது.

இந்தத் திரைப்படம் 2003 ஆம் ஆண்டில் சுவிற்சர்லாந்தின் சிறந்த திரைப்படத்திற்கான விருதினைப் பெற்றுக்கொண்டது. விவாகரத்துப் பெற்றிருக்கும் ஒரு தந்தை, அவருடைய பிள்ளைகள், முன்னைய மனைவி, அவளுடைய காதலன் ஆகியோருக்கு இடையில் நிலவிவரும் கொந்தளிப்பு மிக்க உறவுகளைச் சித்தரிக்கின்றது.

நாளை பிற்பகல் 2.30 மணிக்கு இயக்குநர் ஸ்ரீபன் கோப்ட்டின் **Utopia Bluse** திரைப்படமும், இந்தத் திரைப்படம் கனவுகளிலும், கற்பனையிலும் தனது வாழ்க்கையைக் கழித்து வரும் ஒரு வேடிக்கையான இளைஞனின் கதையைச் சித்தரிக்கிறது.

மாலை 4-30 மணிக்கு இயக்குநர் நினோ யக்குஸோவின் **Escape to paradise** என்கின்ற திரைப்படமும் காண்பிக்கப்படவுள்ளது. இத்திரைப்படம் துருக்கியில் இடம்பெறும் இனக்கலவரத்தில் இருந்து தப்பி வந்து சுவிற்சர்லாந்தில் தஞ்சம் புகுந்துள்ள ஒரு குர்திஷ் குடும்பத்தின் கதையை சித்திரிக்கின்றது.

## குழுக் கூட்டம்

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் 22 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு அரச அதிபர் செ.பத்மநாதன் தலைமையில் மாவட்ட செயலகத்தில் இடம் பெறவுள்ளது. இந்தக் கூட்டத்துக்கு அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளைக் கலந்து கொள்ளுமாறு யாழ்.செயலகம் அழைப்பு விடுத்துள்ளது. (29)

## சிறுவர்களுக்கான! உளமருத்துவ சிக்ச்சை

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலுள்ள குழந்தைகளின் உளமருத்துவ நிபுணர் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்துள்ளார். இவர் இன்றும் நாளையும் யாழ் பொது மருத்துவமனையில் சிறுவர்களுக்கான உளமருத்துவ சிகிச்சை அளிக்கவுள்ளார்.

இதன்படி இன்றையதினம் பிற்பகல் ஒரு மணியிலிருந்து 3 மணிவரையும், நாளையதினம் காலை 8-30 மணியிலிருந்து ஒரு மணிவரையும் இந்தச் சிகிச்சை அளிக்கப்படுமென பொதுமருத்துவமனை உளமருத்துவப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

### சுகாதார ஊழியர்களுக்கு

## நான்கு வருடங்களுக்கு மேலாக தையல் கூலி வழங்கப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ் பிராந்திய சுகாதாரத் திணைக்களத்தின் கீழுள்ள வைத்தியசாலைகளில் பணியாற்றும் சிற்றூழியர்களுக்கு கடந்த நான்கு வருடங்களுக்கு மேலாக சீருடைத் தையல்கூலி வழங்கப்படவில்லையென ஊழியர்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

இவர்களுக்கான சீருடைத் துணிகள் வழங்கப்படுகின்ற போதிதிலும், தையல்கூலி வழங்கப்படுவதில்லை. இதனால் சிற்றூழியர்கள் தமது பணத்திலேயே சீருடைகளைத் தைக்க வேண்டியுள்ளதால் இந்தக் கொடுப்பனவுகளை வழங்குமாறு கோரி சம்பந்தப்பட்டவர்களுக்கு தெரிவித்தும், இதுவரை எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லையென சுகாதார ஊழியர்கள் தெரிவித்தனர். (14)


### சிறு விளம்பரம்

**தவறிவிட்டது**

**வரணி பஸ் தரிப்பு நிலையத்தில் 15.11.2004 காலை ஏழு மணியளவில் தெ.துஷ்யந்தன் என்பவரது ஆறு சிப்புடைய கறுப்பு நிறபணப் பை தவறிவிட்டது. இந்தப்பையை மோட்டார் சைக்கிளில் சென்ற ஒருவர் எடுத்துச் சென்றதாகத் தகவல் கிடைத்துள்ளது. தயவு செய்து அந்தப் பையைத் தந்துதவுமாறும் அல்லது அதனைப் பற்றிய தகவலை பின்வரும் முகவரிக்கு அறிவிக்குமாறு அன்புடன் வேண்டப்படுகின்றீர்கள். தெ.துஷ்யந்தன், 216/3 முரசு மோட்டை, பரந்தன், அல்லது மனிதவள அலுவலகம் ஊரியான்.** (805)


## ஆன்மீகச் சொற்பொழிவு

தொண்டமானாறு செல்வசந்நிதி ஆலயச் சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆசிரமம் சைவ கலை, பண்பாட்டுப் பேரவையினால் வெள்ளிக்கிழமை தோறும் நடாத்திவரும் வாராந்த சொற்பொழிவு நிகழ்வில் இன்று மு.ப. 10 மணிக்கு சிரேஷ்ட விரிவுரையாளர் அ. குமாரவேல் பெரியபுராணம் தொடர்பில் சொற்பொழிவாற்றுவார்.

இதற்கு அறிமுகவுரையை கு. அருணகிரிநாதன் நிகழ்த்துவார்.(17)

## ஆசிரியருக்கான செயலமர்வு

(தென்மராட்சி)

அடுத்த ஆண்டு தரம் 1 மாணவர்களுக்கு கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளை காலை 8-30 மணிக்கு சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது. இந்தச் செயலமர்வில் அனைத்து ஆசிரியர்களையும் தவ்றாது பங்குபற்றுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார். (29)

## மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

வேலணைப்பிரதேச மாவீரர்களது பெற்றோரைக் கௌரவிக்கும் நிகழ்வு எதிர்வரும் 23 ஆம் திகதி வேலணை கிழக்கு மகாவித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கான ஏற்பாடுகளை வேலணைப்பிரதேச மாவீரர் செயற்பாட்டுக்குழு மேற்கொண்டு வருகின்றது.

## பிலிப்பைன்ஸ் கைத்தொழில் நிபுணர் யாழ்.வருகிறார்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழிலை விருத்தி செய்வது பற்றி ஆலோசனை வழங்குவதற்கு சர்வதேச நிபுணத்துவம்பெற்ற பிலிப்பைன்ஸ் நாட்டைச் சேர்ந்த யோசிபிற்ரோ குல்லீர்மோ என்பவரை வட பிராந்திய வர்த்தக அபிவிருத்தி மையம் ஒழுங்கு செய்துள்ளது. இந்தக் கருத்தரங்கு எதிர்வரும் திங்கட்கிழமை மாலை 3-00 மணி தொடக்கம் 5-000 மணி வரை யாழ் வணிகர் கழகப் பணிமனையில் நடைபெறும்.

இந்தக் கருத்தரங்கில் ஆர்வமுள்ள பலரும் பங்குபற்றிப் பயன் பெறமுடியும் என்று யாழ் வணிகர் கழகம் அறிவித்துள்ளது.


ராஜா யாழ்ப்பாணம்.




பு.நே 10.30, 2.30, 6.30, 9.30

ரிக்கற் முற்பதிவு செய்துகொள்ளலாம்

நாதன்ஸ் யாழ்ப்பாணம்.

2 வது வெற்றிவாரம் (குளிரூட்டப்பட்டது)

தனுஷ், பிரியா நடித்த

ட்ரீம்ஸ் (ரீல்ஸ்)

வெகுவிரைவில் : இரவு 9.00 (பு.நே) காட்சியாக

RAMBO - 3

காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.00 (பு.நே) (சி-3319)

நாகம்ஸ் சுன்னாகம்



இந்தியாவிலும் - இலங்கையிலும் ஒரேதின வெளியீடான

R.B.சௌத்திரியின்

சரத்குமார், நமீதா, வடிவேல் நடித்த

சத்ரபதி (ரீல்ஸ்)

காட்சி நேரம்: 11.00, 2.00, 7.00, 10.00 (பு.நே)

நிறைஞ்சனாஸ் சங்கானை

ராஜ்கிரன், ரம்யாகிருஷ்ணன் நடித்த

அன்னை காளிகாம்பாள் (ரீல்ஸ்)

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)

RAMBO - 3 (சி-2723)

# இந்திய மீனவர் மீது தாக்குதல்

# நிரந்தர தீர்வுகாணக் கோரிக்கை

இலங்கைக் கடற்படையால் தமிழக மீனவர்கள் சுட்டுக் கொல்லப்படும் தொடர் சம்பவத்துக்கு, நிரந்தரத் தீர்வுகாணுமாறு தென்னிந்திய மீனவர் சங்கம் - மத்திய அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து அந்தச் சங்கத்தின் தலைவர் கு.பாரதி வெளியிட்டுள்ள அறிக்கையில் -

புயல், வெள்ளம், கடற்கொந்தளிப்புப் போன்ற இயற்கைச் சீற்றங்கள், மீன் இனப்பெருக்க காலமான 45 நாட்கள் - கடலில் மீன்பிடிக்கச் செல்லாமல் இருப்பது, பழுதாகும் படகுகள், என்ஜின்கள், வலைகளைப் பழுதுபார்த்தல் உட்படப் பல்வேறு காரணங்களின் அடிப்படையில் பார்த்தால், ஓராண்டில் சுமார் 100 நாட்கள் மட்டுமே மீனவர்கள் கடலுக்குள் மீன்பிடிக்கச் செல்கின்றனர்.

இந்த நிலையில், இராமநாதபுரம், புதுக்கோட்டை, நாகபட்டினம், திருவாரூர் மாவட்டங்களைச் சேர்ந்த மீனவர்கள் அந்த 100 நாடகளிலும் இலங்கைக் கடற்படையினரின் தாக்குதலுக்கு ஆளாகின்றனர். தொடர்ந்து இதுபோன்று நடந்துவருவது கண்டனத்துக்குரியது.

இந்தப் பிரச்சினையில் மத்திய அரசு சார்பில் தற்காலிக நடவடிக்கைகளே எடுக்கப்பட்டு வருகின்றன. எனவே, அரசு இனியும் தாமதிக்காமல் இந்திய மீனவர்களையும், மீன்பிடித் தொழிலையும் பாதுகாக்கும் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக் குறிப்பிட்டப்பட்டுள்ளது.

# கொழும்பு துறைமுகப் பகுதியினுள் நுழைய முயன்ற இளைஞன் கைது

(கொழும்பு)

அனுமதியின்றி கொழும்புத் துறைமுகத்தினுள் துவிச்சக்கர வண்டியுடன் உட்பிரவேசிக்க முயன்ற தமிழ் இளைஞன் ஒருவர் - கடற்படையினரால் கைது செய்யப்பட்டு, பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

நேற்று முன்தினம் மாலை 7 மணிக்கு வவுனியா சின்னக்குளத்தைச் சேர்ந்த ஜீவராஜா கேதஸ்வரன் என்ற 15 வயதான இளைஞன் துவிச்சக்கர வண்டியுடன் இங்குருகொட சந்தி ஊடாகக் கொழும்புத் துறைமுகப் பகுதிக்குள் உட்பிரவேசிக்க முயன்றார்.

இவரை வழி மறித்த துறைமுகக் கடற்படையினர் - துறைமுகப்பகுதிக்குள் நுழைவதற்கான காரணத்தைக் கேட்டபோது, குறிப்பிட்ட இளைஞர் உரிய பதிலை வழங்கவில்லை.

இதனையடுத்து குறிப்பிட்ட இளைஞனைக் கைது செய்த கடற்படையினர், மேலதிக விசாரணைக்காக துறைமுகப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

## அபிவிருத்திச் சங்க பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் சுற்றயல்கூறு வைத்தியசாலை அபிவிருத்திச் சங்க பொதுக்கூட்டம் நாளை சனிக்கிழமை 10 மணிக்கு வைத்தியசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் நலன் விரும்பிகளையும், அங்கத்தவர்களையும் கலந்து கொள்ளுமாறு அபிவிருத்திச் சங்கச் செயலாளர் கேட்டுள்ளார்.

# மேலும் ஒரு தபால் பொதி பற்றைக்குள் இருந்து மீட்பு

(கொழும்பு)

மத்திய தபால் பரிவர்த்தனை நிலையத்தின் வெளிநாட்டு அஞ்சல் பிரிவால் வீசப்பட்ட மற்றுமொரு தபால் பொதி - நேற்றுமுன்தினம் கோட்டை ரயில் நிலையத்தின் பிற்புறமுள்ள பற்றைக்குள் இருந்து கண்டுபிடிக்கப்பட்டது.

இந்தப் பொதியினுள் 2500 கடிதங்கள் மற்றும் பொதிகள் என்பன இருந்ததாகவும், அவை அனைத்திலும் இருந்த காசோலைகள், பொருட்கள் என்பன திருடப்பட்டிருப்பதாகவும் அஞ்சல் பரிவர்த்தனை நிலைய உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்.

இந்தத் தபால் பொதி முன்னர் வீசப்பட்ட இடத்திலன்றி, வேறொரு இடத்திலேயே வீசப்பட்டிருந்தது. இரகசியப் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளதாக அஞ்சல் மா அதிபர் தெரிவித்தார்.

இந்த மோசடிகள் தொடர்பாக குற்றவியலாளர் திணைக்களம் பரந்த அளவில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இந்தப் பொதிகளிலிருந்து கைவிரல் அடையாளங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளதாக இரகசியப் பொலிஸார் தெரிவித்தனர்.

# அரச ஊழியர்கள் 3500 பேருக்கு இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன

வருடாந்த இடமாற்றம் வழங்கும் சுற்றறிக்கைக்கு அமைய- நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, ஜனவரி முதலாம் திகதி முதல் செயற்படுத்தப்படும் விதத்தில் அரச ஊழியர்கள் 3500 பேருக்கு இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த இடமாற்றச் சுற்றறிக்கைக்கு அமைய, எந்தவொரு வருடத்திலும் ஓகஸ்ட் மாதத்தில் அவர்களுடைய இடமாற்றங்கள் பற்றிச் சம்பந்தப்பட்ட ஊழியர்களுக்குத் தெரியப்படுத்தவேண்டி இருந்தாலும், இந்தமுறை 3 மாதங்கள் தாமதமாகி நவம்பர் மாதத்தில் இடமாற்றங்கள் தெரியப்படுத்தப்பட்டிருப்பதால், அது குறித்து அரச ஊழியர்கள் ஆட்சேபனையைத் தெரிவிப்பதற்கு இயலாமல்போகும் நிலை உருவாகியுள்ளது.

தாபனக் கோவைக்கு அமைய 53 வயது பூர்த்தியடைந்தவர்களை, அவர்களது மாவட்டத்திலிருந்து வேறு மாவட்டங்களுக்கு மாற்ற முடியாமல் போயிருந்தாலும், அவைகுறித்துக் கவனத்தில் எடுக்காமலே அனைத்து இடமாற்றங்களும் வழங்கப்பட்டுள்ளன. (தே)



திருமலை மாவட்டத்துக்கு நேற்றுமுன்தினம் விஜயம் செய்த புனர்வாழ்வு அபிவிருத்தி அமைச்சர் நஜீப் எம்.மஜீத் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட புனர்வாழ்வு அமைச்சர் எம்.எஸ்.அமீர் அலி ஆகியோரைக் கிண்ணியாவில் வைத்து மக்கள் அழைத்து வருவதைப் படத்தில் காணலாம்.

படம் : சசிகுமார்

# பல்கலைக்கழக கல்வியில் மேலும் 16 புதிய கற்கைகள்

பல்கலைக்கழக கல்வியுடன் மேலும் 16 புதிய கற்கை நெறிகளை இணைத்துக் கொள்வதற்கு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இரசாயனப் பகுப்பாய்வு, போக்குவரத்து முகாமைத்துவம், கட்டடக்கலை போன்ற பல கற்கைநெறிகளைப் புதிதாக ஆரம்பிப்பதற்குத் தர்மானிக்கப்பட்டுள்ளது.

வர்த்தக சந்தைக்கு உதவக்கூடிய வகையில் இந்தக் கற்கைநெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இவ்வாறு புதிய கற்கைநெறிகளை ஆரம்பிப்பது குறித்துப் பல சுற்றுப் பேச்சுக்கள் நடத்தப்பட்டதாகவும், அடுத்து அமுல்படுத்தப்படவேண்டிய செயற்திட்டங்கள் குறித்து பேச்சு வார்த்தைகள் தற்போது நடத்தப்பட்டு வருவதாகவும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் ரஞ்சித் மென்டிஸ் தெரிவித்தார்.

தற்போது உயர்தரப் பாடத்திட்டங்களுடன் 67 விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தாலும், அது தொழில் வர்த்தக சந்தைக்கு ஏற்றவாறு அமைந்திருக்கவில்லை எனவும் கல்வியாளர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் நிலையியற் குழுவின் விதந்துரையில் - பல்கலைக்கழக மாணவர்களுக்கு மாற்று விடயங்களும் வழங்கப்படவேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (தே)

# சுவிஸ் அபிவிருத்தி நிலைய அதிகாரி கைதடிக்கு விஜயம்

(கைதடி)

சுவிஸ் அரசின் சர்வதேச தொண்டர் அமைப்பான சுவிஸ் அபிவிருத்தி தலைமையக நிலையத்தின் அதிகாரி இவான் கயூரி கைதடி நவில்ட் வலப்புலன் இழந்தோர் பாடசாலைக்கு விஜயம் செய்தார்.

யாழ்.குடாநாட்டிற்கான விஜய மொன்றை மேற்கொண்டு கடந்த வாரம் வருகைதந்து இவர் - 15 ஆம் திதி வரைதங்கிருந்து சுவிஸ் அபிவிருத்தி நிலையத்தால் மேற்கொள்ளப்பட்டுவரும் நிர்மாண பணிகளைப் பார்வையிட்டார்.

இந்த நிலையில் கடந்த 9 ஆம் திகதி கைதடி நவீல்ட் வலப்புலன் இழந்தோர் பாடசாலைக்கு விஜயம் செய்து அங்கு முன்னெடுக்கப்படும் நிர்மாணப் பணிகளையும் பார்வையிட்டார். (17)

# சபாநாயகர் பதவி நீக்கம் நிச்சயம் என்கிறது ஜே.வி.பி

(கொழும்பு)

சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பாக ஆராயும் ஆலோசனைக் குழுவில் கலந்து கொள்ளவேண்டுமாயின், சபாநாயகரைப் பதவி விலக்கக்கூடாது என்று ஐக்கிய தேசியக் கட்சி நிபந்தனை விதித்தாலும், சபாநாயகர் பதவி நீக்கம் நிச்சயம் நடைபெறும் என ஜே.வி.பி அமைச்சர் லால் கந்த தெரிவித்தார்.

ஜே.வி.பிக்கு எதிராக அவதூறு கூறி, அரசிலிருந்து ஜே.வி.பியை விலக்கிவிட ஐ.தே.க முயற்சிப்பதாக கூறிய அவர்- ரணில் விக்கிரமசிங்கவின் திட்டங்கள் சரியாக இருந்திருந்தால் அவர் இன்றும் பிரதமராக இருந்திருப்பார்.

அகில இலங்கை சுவசேவை சங்கத்தின் 7 ஆவது வருடாந்த மாநாட்டில் கலந்து கொண்டு பேசிய போது கூறியதாவது -

புலிகளின் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை யோசனையின் அடிப்படையில், பேச்சுக்களை ஆரம்பித்தால் ஜே.வி.பி - அரசாங்கத்தில் இருந்து விலக்கி விடும் என்று அவருக்குத் தெரியும்.

விடுதலைப் புலிகளின் உதவியுடன் ஜனாதிபதியாக வந்து ஆட்சி பீடமேறுவதற்கு ரணில் விக்கிரமசிங்க முயற்சிக்கிறார். அதற்கு ஒருபோதும் நாம் அனுமதிக்கமாட்டோம்.

சுகாதாரத் துறையில் நிலவும் நெருக்கடிகளைத் தீர்க்க சுதந்திர முன்னணி அரசாங்கம் தவறிவிட்டது. சுதந்திர முன்னணியின் நாட்டைக் கட்டியெழுப்பும் திட்டத்தில், சுகாதாரத்துறையின் மேம்பாட்டுக்குத் தேசியக் கொள்கை வகுக்கப்படும் என்று உறுதியளிக்கப்பட்டபோதிலும், அதனை இதுவரை மேற்கொள்ள முடியவில்லை.

ஒரு சில தொழிற்சங்கங்களுக்கு அடிபணிந்து அமைச்சர் செயற்படுகிறார். இது தவறானது. தாதிகள் சங்கமும், அரச மருத்துவ அதிகாரிகள் சங்கமும் அமைச்சரை ஆட்டிப்படைக்கின்றன. இது சுகாதாரத்துறைக்கு உகந்தது அல்ல எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# வடக்கு - கிழக்கு முஸ்லிம்களின் எதிர்பார்ப்புக்கு தனியான யோசனை

இனப் பிரச்சினைக்கான தீர்வு எட்டப்படும்போது, வடக்கு முஸ்லிம்களின் எதிர்பார்ப்பு தொடர்பாக தனியான யோசனையொன்று முன்வைக்கப்படவிருப்பதாக, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மாற்றுக் குழுத் தலைவரும், வன்னி புனர்வாழ்வு அபிவிருத்தித்துறை அமைச்சருமான றிசாத் பதியுதீன் தகவல் வெளியிட்டார்.

நேற்றுமுன்தினம் புத்தளத்தில் வடக்கிலிருந்து வெளியேறிய முஸ்லிம் உலமாக்களுடன் இது தொடர்பாக ஆராயும் கூட்டத்தின் பின்பு செய்தியாளர்கள் மத்தியில் பேசியபோதே இவ்வாறு தெரிவித்தார்.

இது பற்றி அவர் மேலும் தெரிவிக்கையில் -

வடக்கு முஸ்லிம்களின் எதிர்பார்ப்பை திருப்திப்படுத்தாத எந்தவொரு கட்சிக்கும் எனது ஆதரவு இருக்க மாட்டாது. கடந்த 14 வருடங்களாக வடக்கு முஸ்லிம்களின் பிரச்சினைகள் இருட்டடிப்புச் செய்யப்பட்டுள்ளன.

யுத்தத்தில் நேரடியாக அவர்கள் பங்கு பற்றாது விட்டாலும், வடக்கிலிருந்து வெளியேற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டமையால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

சொந்த மண்ணில் விரைவாக மீள் குடியேற வேண்டும் என அந்த முஸ்லிம்கள் எதிர்பார்க்கிறார்கள்.

வடக்கு முஸ்லிம்களின் எதிர்பார்ப்புக்களை பூர்த்தி செய்யக்கூடிய தீர்வையே நாம் எதிர்பார்க்கிறோம். இந்த விடயத்தில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வாய் திறக்காமல் இருப்பது வேதனைக்குரியது, கண்டிக்கப்பட வேண்டியது.

இடம்பெயர்ந்துள்ள வடக்கு முஸ்லிம்கள் சார்பில் தீர்வொன்றை முன்வைப்பதற்கு, தீர்வுத்திட்டமொன்றை தயாரிப்பதற்காக பல்வேறு தரப்பினருடன் கூடி ஆராயவிருக்கிறோம்.

இதன் அடிப்படையில் தான் உலமாக்களுடன் கூடி ஆராயப்பட்டது என அவர் மேலும் தெரிவித்தார்.

# வேலை நிறுத்தப் போராட்டங்களுக்கு அரசாங்கமே முக்கிய காரணமாம்

## ஐ.தே.கட்சி குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்திடம் உரிய கொள்கைகள் இன்மையாலேயே, நாட்டில் வேலை நிறுத்தப் போராட்டங்கள் இடம்பெற்று வருவதாக, ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

இந்தப் பிரச்சினை தொடராது இருக்க, அரசாங்கம் தீர்வு ஒன்றைக் காணவேண்டும் என்று - ஐக்கிய தேசியக் கட்சி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் பங்குச் சந்தை மற்றும் உல்லாசப் பயணிகளின் வருகை என்பனவற்றில் எவ்வித வீழ்ச்சியும் ஏற்படாமைக்கு ஐக்கிய தேசியக் கட்சி -விடுதலைப்புலிகளுடன் மேற்கொண்ட போர் நிறுத்த ஒப்பந்தமே காரணமாகும் என, ஐக்கிய தேசியக் கட்சி விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அவுஸ்ரேலிய அணிக்கு எதிராக நியூஸிலாந்து 250 ஓட்டங்கள் குவிப்பு



(சிட்னி)

அவுஸ்ரேலிய அணிக்கு எதிராக பிறிஸ்பேனில் நேற்று ஆரம்பமான முதலாவது டெஸ்ட் போட்டியில் முதலாம் நாளில் நியூஸிலாந்து அணி 7 விக்கெட் இழப்புக்கு 250 ஓட்டங்களைப் பெற்றது.

அவுஸ்ரேலியாவுக்கு விஜயம் செய்திருக்கும் நியூஸிலாந்து கிரிக்கெட் அணி பிறிஸ்பேனில் நேற்று முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் பங்கேற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நியூஸிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. ரிச்சட்சனும், சின்கிளயரும் இணைந்து ஆட்டத்தை ஆரம்பித்தனர். ஆயினும் அணியின் ஸ்கோர் 26 ஆக இருந்தபோது - கஸ்ப்ரோவிச்சின் பந்துவீச்சில் பொண்டிங்கிடம் பிடிகொடுத்து ரிச்சட்சன் ஆட்டமிழந்தார். இவர் 19 ஓட்டங்களை மட்டுமே பெற்றிருந்தார்.

இதையடுத்து பிளெமிங் களமிறங்கிய போதும் எந்த ஓட்டத்தையும் பெறாமலேயே ஜிலெஸ்பியின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.


தொடர்ந்து சின்கிளயருடன் ஸ்ரைரிஸ் ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி ஓரளவுக்கு நிலைத்து ஆடி அணியின் ஸ்கோர் 77 ஆக உயர்ந்த போது அடுத்த விக்கெட் வீழ்த்தப்பட்டது. 27 ஓட்டங்களுடன் ஸ்ரைரிஸ் கஸ்பரோவிச்சின் பந்துவீச்சில் கில்கிறிஸ்டிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

இதன் பின்னர் அஸ்ரில் களமிறங்கி 19 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ரன் அவுட்டாகி மைதானத்தை விட்டு அவரும் வெளியேறினார்.

அடுத்ததாக மக்மிலன் களமிறங்கினார். ஆனால் அதே ஸ்கோரிலேயே சின்கிளயர் 69 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து சென்றார்.

அடுத்து ஜேக்கப் ஓரம் களமிறங்கினார். அவர் நின்றுபிடித்து ஆடிக்கொண்டிருந்த போது மக்மிலன் 23 ஓட்டங்களுடனும், மக்கலம் 10 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்து சென்றனர்.

முதலாம் நாள் ஆட்டநேர முடிவில் நியூஸிலாந்து அணி 7 விக்கெட் இழப்புக்கு 250 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. ஓரம் 63 ஓட்டங்களுடனும், வெற்றோரி 7 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.



பந்துவீச்சில் கஸ்பரோவிச் 3, வோர்ன் 2, ஜிலெஸ்பி 1 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

# கங்கூலிக்கு ஆதரவு தேவை அஜய் ஜடேஜா தெரிவிப்பு!



கங்கூலிக்கு முழு ஆதரவு தேவை என்று, இந்திய அணியின் முன்னாள் துணைக் கப்டன் அஜய் ஜடேஜா கூறியுள்ளார்.


பாகிஸ்தானுக்கு எதிராக சமீபத்தில் இந்தியா மோதிய போட்டி கொல்கத்தாவில் நடைபெற்றது. இந்தப் போட்டியில் இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட நேரத்தைக் காட்டிலும் அதிகமான நேரத்தில் பந்துவீசியது.

இந்த நிலையில், சூதாட்ட பிரச்சினையில் சிக்கி 5 ஆண்டு தடைபெற்ற அஜய் ஜடேஜா டெல்கியில் நிருபர்களிடம் கூறுகையில் - கங்கூலிக்கு வழங்கப்பட்ட தடை எதிர்பாராத ஒன்று. இந்த விடயத்தில் இந்திய அணியின் மற்ற வீரர்கள் யாரும் கங்கூலிக்கு ஆதரவாக குரல் கொடுக்கவில்லை.

ஆட்டத்தின் மந்தமான போக்குக்கு மற்ற வீரர்களும் காரணம். எனவே, அவர்களுக்கும் இந்த விடயத்தில் முன்வந்து கங்கூலிக்கு ஆதரவு தெரிவித்து இருக்கவேண்டும் என்றார்.

# விளையாட்டு

# மினி ஒலிம்பிக் போட்டியில் யாழ். பல்கலைக்கு இரண்டாமிடம்



யாழ். பல்கலைக்கழக உதைபந்தாட்ட அணி

(யாழ்ப்பாணம்)

இலங்கை பல்கலைக்கழகங்களுக்கிடையில் மூன்று வருடங்களுக்கு ஒருமுறை நடைபெறும் மினி ஒலிம்பிக் போட்டியில் தடகள விளையாட்டுப் போட்டியில் 16 பதக்கங்களைப் பெற்று யாழ். பல்கலைக்கழகம் இரண்டாம் இடத்தைப் பெற்றது.

கிரிக்கெட் போட்டியில் முதலாம் இடத்தையும், பாரம் தூக்குதலில் இரண்டாம் இடத்தையும், உதைபந்தாட்டத்தில் மூன்றாம் இடத்தையும், வலைப்பந்தாட்டத்தில் மூன்றாம் இடத்தையும், ஹொக்கி ஆட்டத்தில் நான்காம் இடத்தையும், பெண்கள் சதுரங்க ஆட்டத்தில் நான்காம் இடத்தையும் பெற்றுக்கொண்டது.

இந்த மினி ஒலிம்பிக் போட்டியில் யாழ். பல்கலைக்கழகத்தில் இருந்து 180 வீரர்கள் பங்குபற்றினர். யாழ். பல்கலைக்கழகத்தில் சில போட்டிகளுக்குரிய பயிற்றுவிப்பாளர்கள், விளையாட்டு மைதானம் என்பன இல்லாமையால் மினி ஒலிம்பிக் போட்டியில் வீரர்கள் கலந்துகொள்ள முடியவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பதக்கம் பெற்றோர் விபரம் -

என்.ரஞ்சித்குமார் - தடி ஊன்றிப் பாய்தல், நீளம் பாய்தல் (தங்கப் பதக்கம்), பி.கிருபானந்தன் - 400 மீற்றர் தடை தாண்டல் (தங்கப் பதக்கம்), என்.கிஷோக்குமார் - உயரம் பாய்தல் (தங்கப் பதக்கம்)

ரி.கலைமகள் - தட்டெறிதல் (வெள்ளிப் பதக்கம்), ஏ.துஷ்யந்தன்- 100 மீற்றர் ஓட்டம் (வெள்ளிப் பதக்கம்), 110 மீற்றர் தடை தாண்டல் (வெள்ளிப் பதக்கம்), ரி.வாசுகி- 400 மீற்றர் தடைதாண்டல் (வெள்ளிப் பதக்கம்), ஏ.நித்தியா - ஈட்டியெறிதல் (வெள்ளிப் பதக்கம்) அத்துடன் 4X400 மீற்றர் அஞ்சலோட்டத்தில் யாழ். பல்கலைக்கழக அணி வெள்ளிப் பதக்கம்.

110 மீற்றர் தடைதாண்டல் ஓட்டத்தில் பி.கிருபானந்தன் - வெண்கலப் பதக்கம், 200 மீற்றர் ஓட்டத்தில் என்.சுகந்தன் (வெள்ளிப் பதக்கம்), தத்தி மிதித்துப் பாய்தல் - ரி.வாசுகி (வெண்கலப் பதக்கம்), ஈட்டியெறிதலில் பி.வேணி மெற்றில்டா (வெண்கலப் பதக்கம்), உயரம் பாய்தலில் ஏ.சந்திரிக்கா (வெண்கலப் பதக்கம்), 4X100 மீற்றர் அஞ்சலோட்டத்தில் யாழ். பல்கலைக்கழக அணி வெண்கலப் பதக்கத்தையும் பெற்றது.

இந்த மினி ஒலிம்பிக் போட்டியில் என்.கிசோக்குமார் உயரம் பாய்தலில் (1.94மீற்றர்) என்ற புதிய சாதனையை நிகழ்த்தியுள்ளார்.

# சர்ச்சைக்குரிய பந்துவீச்சாளர் பட்டியல் தயாரிக்கப்படவில்லை

## மறுப்புத் தெரிவிக்கிறது ஐ.சி.சி

(லண்டன்)

சர்ச்சைக்குரிய பந்துவீச்சாளர்களின் பட்டியலை சர்வதேச கிரிக்கெட்சபை தயாரித்திருப்பதாகக் கூறப்படுவதில் எவ்வித உண்மையுமில்லை என்று ஐ.சி.சி கூறியுள்ளது.

இது குறித்து அவுஸ்ரேலியப் பத்திரிகைகளில் கடந்த செவ்வாய்க்கிழமை வெளிவந்த செய்தி தவறாகும். இந்தச் செய்தியை வெளியிடும் முன் ஐ.சி.சியுடன் தொடர்புகொண்டு பேசியிருக்கலாம் என்று, ஐ.சி.சி பொது முகாமையாளர் டேவிட் ரிச்சர்ட்சன் கூறியுள்ளார்.

கிரிக்கெட் விதிகளுக்கு முரணான பந்துவீச்சு போன்ற செய்கைகளைக் கண்டறிவதற்காக அமைக்கப்பட்ட நிபுணர் துணைக்குழுவுக்கு தலைவராக இருந்தவர் டேவிட்.

தமது குழு 'ஹிட் லிஸ்ட்' எனப்படும் பட்டியல் எதையும் தயாரிக்கவில்லை. பந்துவீச்சு குறைபாடுகளைக் களைவதற்கான வழிவகைகளை ஆராயும் நோக்குடன்தான் நிபுணர் துணைக்குழு அமைக்கப்பட்டது எனத் தெரிவித்தார்.

இந்தியாவின் ஹர்பஜன் சிங், பாகிஸ்தானின் சொகைப் அக்தர் உட்பட 7 பந்துவீச்சாளர்களின் பந்துவீச்சு சர்ச்சைக்குரியதாக இருப்பதாக ஐ.சி.சி தயாரித்துள்ள பட்டியலில் உள்ளது என்று அவுஸ்ரேலிய பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருந்தன.

ஐ.சி.சியை கலந்தாலோசிக்காமல் இத்தகைய செய்தியை வெளியிட்டிருப்பது தவறு என்றார் டேவிட்.

அரவிந்த டி சில்வா, அங்குஸ் ஃபிரேசர், மைக்கேல் ஹோல்டிங், டோனி லூயிஸ் மற்றும் டிம் மே ஆகியோர் துணைக்குழுவின் மற்றைய உறுப்பினர்கள் ஆவர்.

இந்தக் குழு கடந்த ஒக்ரோபரில் கூடியது. அப்போது பல்வேறு பரிந்துரைகளைச் சமர்ப்பித்தது.

அடுத்த ஆண்டு பெப்ரவரியில் கூடவுள்ள ஐ.சி.சி தலைமை நிர்வாகிகள் குழுவில் இந்தப் பரிந்துரைகள் குறித்து விவாதித்து முடிவெடுக்கப்படும்.

# மாவீரர் நினைவு உதைபந்தாட்டம் யங்ஹென்றீஸ் அரையிறுதிக்கு தெரிவு!

(யாழ்ப்பாணம்)

மாவீரர் நாளை முன்னிட்டு தமிழீழ விளையாட்டுத்துறையின் யாழ். மாவட்டப் பிரிவினரால் நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் காலிறுதி ஆட்டத்தில் - யங்ஹென்றீஸ் அணியை எதிர்த்து சென்.பீற்றர்ஸ் அணி நேற்று மோதியது.

ஆட்டம் தொடங்கப்பட்டு முதல் 2 ஆவது நிமிடத்தில் கிடைத்த உள எறிகையை சென்.பீற்றர்ஸ் அணி வீரன் நிமால் எறிய அவ்வணி வீரன் கிறேசியன் அடித்த பந்து கோல் கம்பத்தில் பட்டு கோலாயிற்று.

அதைத் தொடர்ந்து 07 ஆவது நிமிடத்திலும் இதே அணி வீரன் றொசான் தனித்து பந்தைக் கொண்டு சென்றும் கோல் கம்பத்திற்கு மேலால் அடித்ததால் அப்பந்தைக் கோலாக்கத் தவறிவிட்டார்.

இதில் முதல் கோலை சென். பீற்றர்ஸ் அணியினர் போட்டாலும் யங்கென்றீஸ் அணியினர் தொடர்ந்து இருகோல்களைப் போட்டனர். இதில் 13 வது நிமிடத்தில் யங்ஹென்றீஸ் அணிவீரன் ராஜா தட்டிக் கொடுத்த பந்தை அந்த அணி வீரன் ஸ்ரீபன் கோலாக்கினார்.

அடுத்து 21 ஆவது நிமிடத்தில் ராஜா தட்டிக்கொடுக்க சுரேந்தர் தலையால் இடித்துக் கோலாக்கினார். இதனால் இடைவேளைக்கு முன்னதாக யங்ஹென்றீஸ் அணியினர் 2:1 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தனர்.

இடைவேளையின் பின்னர் ஆட்டம் தொடங்கப்பட்டபோது 8 ஆவது நிமிடத்தில் சென்.பீற்றர்ஸ் அணி வீரர் ஒருவருக்கு நெற்றியில் ஏற்பட்ட காயத்தால் அந்த அணி 10 பேரைக் கொண்டு விளையாடியது.

இடைவேளைக்குப் பின்னர் இரு அணியினருக்கும் மிக விறுவிறுப்பான ஆட்டம் நடைபெற்றது. இறுதியாக 2 நிமிடம் இருக்கும்போது சென்.பீற்றர்ஸ் அணிவீரன் மிகச்சிறப்பாக அடித்த பந்தை யங்கென்றீஸ் அணியினர் தடுத்தனர்.

இதனால் இடைவேளைக்குப் பின்னர் இரு அணியினராலும் ஒரு கோலையும் போடமுடியவில்லை. இதனால் யங்ஹென்றீஸ் அணியினர், சென்பீற்றர்ஸ் அணியை 2:1 என்ற கோல் கணக்கில் தோற்கடித்து அரையிறுதி ஆட்டத்திற்குத் தகுதிபெற்றனர். (12)

## சதுரங்கப் போட்டி

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி உள்ளரங்க விளையாட்டுக்கழகம், மக்கள் வங்கி வட வலயத்தின் அனுசரணையுடன் நடத்தும் வயதுக் கட்டுப்பாடுள்ளோருக்கும், வயதுக் கட்டுப்பாடற்றோருக்குமான சதுரங்கப் போட்டி நாளை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

## உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

மாவீரர் நாளை முன்னிட்டு தமிழீழ விளையாட்டுத துறையின் யாழ். மாவட்டப் பிரிவினரால் நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் காலிறுதி ஆட்டம் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறுகின்றது.

இதில் இன்று பி.ப 4 மணிக்கு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சிவானந்தா விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. அணிகளை உரிய நேரத்துக்கு சமுகமளிக்குமாறு, வடமராட்சி தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பிரியன் கேட்டுக்கொண்டுள்ளார். (12)

# மாஸ்டர்ஸ் ரெனிஸ்; ஹெவிற் முன்னிலையில்!



மாஸ்டர்ஸ் ரெனிஸ் தொடரில் - லேடன் ஹெவிற், அண்டி ரொடிக், மரட் சபின் ஆகியோர் லீக் சுற்றில் வெற்றி பெற்றுள்ளனர். அமெரிக்காவின் ஹூஸ்டன் நகரில் முன்னணி வீரர்கள் பங்கேற்கும் மாஸ்டர்ஸ் ரெனிஸ் தொடர் நடைபெற்று வருகிறது.

லீக் சுற்றுப் போட்டியில் அமெரிக்காவின் அண்டி ரொடிக், பிரிட்டனைச் சேர்ந்த டிம் ஹென்மனை எதிர்த்து விளையாடினார்.

இவர்கள் இருவரும் மோதிய கடைசி நான்கு போட்டிகளில் ஹென்மன் மூன்று முறை வென்றுள்ளார்.

இதனால் பழைய தோல்விகளுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் விளையாடிய ரொடிக் 7-5, 7-6 என்ற நேர் செட்களில் அபார வெற்றி பெற்றார்.

மற்றொரு போட்டியில் அவுஸ்ரேலியாவின் ஹெவிற், ஸ்பெயினின் கார்லோஸ் மோயாவை சந்தித்தார். விறுவிறுப்பாக நடந்த இந்தப் போட்டியில் ஹெவிற் 6-7, 6-2, 6-4 என்ற செட்களில் வெற்றி பெற்றார்.

அடுத்ததாக இவர் உலகின் முன்னணி வீரரான சுவிற்சர்லாந்தின் ரோஜர் பெடரருடன் மோதவுள்ளார். இதில் வெற்றிபெறும் வீரர் அரையிறுதிக்கு முன்னேறலாம்.

மற்றொரு முன்னணி வீரரான ரஷ்யாவின் மரட் சபின், ஆர்ஜென்ரீனாவின் கில்லர்மோ கேனசுடன் மோதினார். இதில் சபின் 6-1, 6-4 என்ற நேர் செட்களில் கில்லர்மோ கேனசை வீழ்த்தினார்.

# சின்னஞ்சிறு செய்திகள்

## அஞ்சலகத்துக்கு முன்னால் பாரிய குழி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அஞ்சல் அலுவலக வெளிவாசலுக்கு முன்னால் வீதியோரத்தில் வட்டமான குழி ஒன்று காணப்படுகிறது.

வீதியோரத்தில் வாசலுக்கு முன்பாகக் குழியை மூடி மழைநீர் தேங்கி நிற்பதால், அஞ்சல் அலுவலகத்துக்கு வரும் பொது மக்கள் குழியினுள் விழும் நிலை ஏற்படுகிறது.

வீதியோரத்திலுள்ள குழியை மூடுவதற்கு சம்பந்தப்பட்டோர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. (21)

## கூட்டுறவுச்சபை மண்டபத்தில் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு தொடர்பான கலந்துரையாடல் இன்று பகல் 11 மணிக்கு கூட்டுறவுச்சபை மண்டபத்தில் தலைவர் பெ.கனகசபாபதி தலைமையில் நடைபெறவிருக்கிறது.

கூட்டுறவுச் சபையின் அனைத்து அங்கத்துவ சங்கங்களையும் கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறு கூட்டுறவுச்சபை அழைப்பு விடுத்துள்ளது. (21)

## கூட்டுறவுச்சங்க உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி வகுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைந்த கல்வித் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்திலுள்ள பலநோக்கு கூட்டுறவுச்சங்கங்கள், இரண்டாம் படிச் சங்கங்கள், மாவட்ட மட்டக் கூட்டுறவுச் சங்கங்களின் பொது முகாமையாளர்கள், கணக்காளர்களுக்கான இரண்டு நாள் பயிற்சி வகுப்பு - டிசம்பர் முற்பகுதியில் கூட்டுறவுச் சபையால் நடத்தப்படவுள்ளது.

இந்தப் பயிற்சிநெறியில் கலந்துகொள்பவர்கள் தொடர்பான விபரங்களை இந்த மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கூட்டுறவுச்சபைச் செயலாளர் சகல சங்கங்களுக்கும் அறிவித்துள்ளார். (21)

# அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கும் வயதெல்லை பதினைந்தாகக் குறைப்பு

ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்டுவரும் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கும் வயதெல்லை - 16 இலிருந்து 15 வயதாகக் குறைக்கப்படவுள்ளதாக, ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் பி.பீ.அபயக்கோன் தெரிவித்தார்.

இந்த விடயம் பற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது -

ஒவ்வொரு பிரதேச செயலகத்திலும் அந்தந்தப் பிரிவுக்குட்பட்ட மக்கள் தொடர்பான விபரங்கள் திரட்டப்பட்டு, பட்டியல் படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

ஒரு மாணவனுக்கு 15 வயது பூர்த்தியடைந்ததும், பிரதேச செயலகத்தால் அந்த மாணவனுக்கு "நீங்கள் அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்ளும் தகுதியைப் பெற்றுக் கொண்டீர்கள்" என்ற தலைப்பில் கடிதங்கள் அனுப்ப வேண்டும் இதன் மூலம் மக்கள் சிறந்த முறையில் அறிவுறுத்தப்படுவர். இது எமது எதிர்பார்ப்பாகும்.

15 வயது முடிவில் ஒரு மாணவன் அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

தொடர்ந்து க.பொ.த சாதாரண பரீட்சைக்கு விண் ணப்பிக்கும் படிவத்தில் அடையாள அட்டை இலக்கம் கட்டாயம் குறிப்பிட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (122)

## தென்னம் நாற்றுக்கள் அன்பளிப்பு

அரியாலைப் பகுதி மக்கள் பலருக்கு, கடந்த சனிக்கிழமை தென்னம் நாற்றுக்கள் வழங்கப்பட்டன.

தென்னை அபிவிருத்திச் சபையால் குறைந்த செலவில் தருவிக்கப்பட்ட 400 தென்னம்நாற்றுகள் மற்றும் உரம் என்பவை அரியாலை விவசாய சம்மேளனத் தலைவர் எஸ்.ரி. பத்மநாதன் தலைமையில் அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலையில் வைத்து வழங்கப்பட்டன. (55)

# தேசியத் தலைவர் பிரபாகரனுக்கு பிறந்தநாள் பரிசு அனுப்ப ஏற்பாடு

தமிழீழ தேசியத் தலைவர் வேலுபபிள்ளை பிரபாகரனின் 50 ஆவது பிறந்தநாளையொட்டி, யாழ். மாவட்ட தனியார் போக்குவரத்துச் சேவைச் சங்கங்களின் ஒன்றியம் அவருக்கு பிறந்தநாள் பரிசு ஒன்றை வழங்கவுள்ளது.

எதிர்வரும் நவம்பர் 26 ஆம் திகதி தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் பிறந்தநாள் கொண்டாடப்படுகிறது. இதேவேளை, அவரது 50 ஆவது பிறந்ததினத்தைச் சித்திரிக்கும் முகமாக அவரது உருவப் படங்களை - சேவையில் ஈடுபடும் தனியார் போக்குவரத்துச் சேவைச் சங்கங்களுக்குச் சொந்தமான வாகனங்களில் வைத்து, அவரது பிறந்த நாளை மகிழ்ச்சிகரமாகக் கொண்டாடப்படவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மேலும் தலைவரின் பிறந்ததினமான 26 ஆம் திகதி காலை 10 மணிக்கு தனியார் போக்குவரத்துச் சேவைச் சங்கங்களின் நிர்வாகிகள், பணியாளர்களுக்கு கேக் வழங்கி, குதூகலமாகக் கொண்டாடுவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# தென்மராட்சியில் மேலும் 94 பேருக்கு உதவிப்பணம் வழங்கப்படவுள்ளது

தென்மராட்சிப் பிரதேச செயலக சமூகசேவைப் பகுதியால், இந்தப் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட, தெரிவுசெய்யப்பட்ட 94 பேருக்குத் தற்காலிக பொதுசன உதவிப் பணம் வழங்கப்படவுள்ளது.

ஏற்கனவே உதவிப் பணம் பெறுபவர்களைவிட மேலதிகமாகவே இவர்களுக்கு இந்தக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

இந்தக் கொடுப்பனவு வழங்கப்பட வேண்டியவர்களது பெயர், வழங்க வேண்டிய தொகை உட்பட - கொடுப்பனவுப் பட்டியல் சாவகச்சேரி தபாலகத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (24)

# அரியாலை விவசாய சம்மேளனத்துக்கு புதிய அங்கத்தவர்களுக்கான விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)

அரியாலை விவசாய சம்மேளனத்துக்கு, புதிய அங்கத்தவர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தச் சம்மேளனத்துக்குப் புதிய அங்கத்தவர்களாகச் சேர விரும்புபவர்கள் - அரியாலை விவசாய சம்மேளனத்தின் தலைவர் எஸ்.ரி.பத்மநாதனிடமோ, உப தலைவரான த.சிவலிங்கத்திடமோ விண்ணப்பப் படிவங்களைப் பெற்று, அதைப் பூர்த்தி செய்து, எதிர்வரும் 30 ஆம் திகதிக்குள் அங்கத்துவப் பணமாக 200 ரூபாவைச் செலுத்தி, தங்கள் விண்ணப்பங்களை ஒப்படைக்கும்படி அரியாலை விவசாய சம்மேளனத்தினர் கேட்டுக் கொண்டுள்ளனர். (55)

# அடுத்த ஆண்டுக்கான ஓய்வூதிய கொடுப்பனவு திகதி அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

அடுத்த ஆண்டுக்கான ஓய்வூதியக் கொடுப்பனவுத் திகதிகள்- ஓய்வு,தியத் திணைக்களத்தால் சகல பிரதேச செயலகங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளன.

ஓய்வூதியத் திணைக்கள 10/2004 இலக்க சுற்று நிருபத்தின் படி, 2005 ஆம் ஆண்டுக்கான ஓய்வூதியக் கொடுப்பனவுத் திகதிகள் வருமாறு -

ஜனவரி - 12, பெப்ரவரி - 10, மார்ச - 10, ஏப்ரல் - 07, மே - 12, யூன்- 09, யூலை - 12, ஓகஸ்ட் - 11, செப்ரெம்பர் - 08, ஒக்ரோபர் - 06, நவம்பர் - 10, டிசம்பர் - 08

தெனமராட்சிப் பிரதேச செயலகம் மூலம், ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியர்களுக்கு - டிசம்பர் மாத ஓய்வூதியப் பற்றுச் சீட்டுடன் இந்தத் திகதிகள் தனித்தனியே அனுப்பிவைக்கப்படுமென ஓய்வூதியக் கிளையினர் தெரிவித்தனர். (24)

## கரவெட்டி செயலக கணக்காளர் இடமாற்றம்

இதுவரை காலமும் மாவட்டச் செயலகத்திலும், கரவெட்டிப் பிரதேச செயலகத்திலும் கடமையாற்றிய கணக்காளர் க.கமலேஸ்வரன் - இந்த மாதம் 15 ஆம் திகதி முதல் கரவெட்டிப் பிரதேச செயலகத்துக்கு இடமாற்றப்பட்டுள்ளார். (24)

# சரிந்துவிழும் நிலையிலுள்ள மட்டுவில் பகுதி மின்கம்பங்கள்

மட்டுவில் பகுதியில் மின்னிணைப்பு வேலைகளை மேற்கொள்வதற்காக, நடப்பட்ட மின் கம்பங்கள் சரிந்து விழும் நிலையில் உள்ளன.

மட்டுவில் வடக்கு - மாணாவளைப் பகுதி முதல் கனகம்புளியடி வரையுள்ள பருத்தித்துறை வீதியிலும், கனகம்புளியடி முதல் -முத்துமாரி அம்மன் கோவிலடி வரையான புத்தூர் வீதியிலும், நாட்டப்பட்ட உயர அழுத்த மின்கம்பங்களே கடும் மழை காரணமாக சரிந்து விழும் நிலையில் உள்ளன.

அண்மையில் இந்த வீதியிலேயே ஒரு மின்கம்பம் முறிந்து வீழ்ந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த மின்கம்பங்கள் நாட்டப்பட்டு பல மாதங்கள் கடந்த பின்னும், மினனிணைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்படாமையும், நாட்டப்பட்ட கம்பங்கள் இவ்வாறு சரிந்து விழுந்து, உயிராபத்தை ஏற்படுத்தக்கூடிய விதத்தில் இருப்பதும் மக்கள் மத்தியில் பெரும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. (24)

# வீதி திருத்தப்படாததால் பொதுமக்கள் சிரமம்

அரியாலை - நொத்தாரிஸ் வீதி மிக நெடுங்காலமாகத் திருத்தப்படாததால், அந்தப் பகுதியால் போக்குவரத்துச் செய்யும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

குன்றும் குழியுமாக மிக மோசமாகச் சேதமடைந்து காணப்படும் இந்த வீதி, குறிப்பாக கண்டி வீதிக்கும் - நாவலர் வீதிக்குமிடையில் காணப்படும் பகுதி மிக மோசமாகச் சேதமடைந்து இருப்பதால், மழை நீர்தேங்கிப் பெரு வெள்ளம் நிரம்பியுள்ளது.

இதன் காரணமாக இந்த வீதியால் போக்குவரத்துச் செய்ய முடியாதுள்ளது எனவும், உரிய அதிகாரிகளுக்கு இது பற்றித் தெரிவித்தும், இதுவரை அவர்கள் அதைக் கவனத்தில் எடுக்கவில்லை எனவும், அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்தனர். (55)

## மொழிபெயர்ப்பாளராக எஸ். வீரசிங்கம் சத்தியப்பிரமாணம்

(தென்மராட்சி)

தெனமராட்சிப் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் எஸ். வீரசிங்கம் - சாவகச்சேரி நீதிமன்ற நீதி நிர்வாக எல்லைக்குட்பட்ட சத்தியப் பிரமாண மொழி பெயர்ப்பாளராக, நீதிவான் பா.சுப்பிரமணியம் முன்னிலையில் கடந்த 15 ஆம் திகதி சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

இலங்கை பொது எழுதுநர் சேவை 1 ஆம் தரத்தில் சேர்ந்த இவர் - இலங்கையின் பல பாகங்களிலும், பல்வேறு திணைக்களங்களிலும் பணியாற்றிய அனுபவசாலியும், மும்மொழிப் புலமையுடையவருமாவார். (24)

## புதிய தலைவர் தெரிவு

(திருநெல்வேலி)

திருநெல்வேலியில் உள்ள மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்துக்கு நெறியாளர் குழு உறுப்பினராகவும், தலைவராகவும் முன்னாள் விவசாயத் திணைக்கள உதவி ஆணையாளரும், சமாதான நீதிவானுமாகிய எஸ்.ரி.பத்மநாதன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இந்த நியமனம் யாழ். அரச அதிபரின் சிபாரிசின் பேரில் யாழ். கூட்டுறவு உதவி ஆணையாளரால் வழங்கப்பட்டது.



நோர்வே நிதியுதவியுடன் றீடோ நிறுவனம் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் நடத்திய பெற்றார் வீட்டுக் கல்வித் திட்டத்தில் பங்கேற்றுப் பயனடைந்தோருக்கு பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படம்



அண்மையில் கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற தமிழ் விழாவின்போது சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட நல்லூர் கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ச.காங்கேயன் மாணவன் ஒருவருக்கு சான்றிதழ் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

# பட்டங்கள் பெற்றுவிட்டால் மட்டும் இசையில் கரை கண்டுவிட்டதாக எண்ணிவிட முடியாது



## சிநேகிதியே

(சென்றவாரத் தொடர்ச்சி...)

என்னிடம் கற்ற மாணவர்களில் பலர் தமது ஒய்வு நேரங்களிலும், எனக்கு வசதியற்ற நேரங்களிலும் இசை வகுப்புக்கள் தடையின்றித் தொடர்வதற்கு உதவி செய்கின்றனர்.

1992 ஆம் ஆண்டுமுதல் தேசியக் கல்வி நிறுவகத்தின் தொலைக்கல்வி ஆசிரியர் பயிற்சி நெறியின் அழகியற் பாடப் போதனாசிரியராக நியமனம் பெற்றேன். இந்த ஆண்டிலேயே இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பட்டப் பின் கல்வி டிப்ளோமாப் பட்டத்தையும் பெற்றேன்.

1998 ஆம் ஆண்டில் 'கர்நாடக சங்கீதம்' என்னும் நூலை தரம் 10, தரம் 11 வகுப்புக்களில் இசை கற்கும் மாணவர்கள் பயன்படுத்தக்கூடியதாக எழுதி, அச்சிட்டு வெளியிட்டேன். இந்த நூல்களின் 4 ஆம் பதிப்பு 2004 ஆம் ஆண்டில் வெளிவந்தது.

1999 ஆம் ஆண்டில் யாழ்.கல்வி வலய சங்கீத ஆசிரிய ஆலோசகராக நியமிக்கப்பெற்றேன்.

1999 ஆம் ஆண்டில் எனது சகோதரன் ம.சந்திரசேகரத்தின் ஊக்குவிப்பால் பஞ்சபுராணங்கள் அடங்கிய பண்ணிசை ஒலிநாடாவை நானே பாடி வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது.

2003 ஆம் ஆண்டு தை மாதம் 18 ஆம் திகதி என்னால் ஆக்கப்பெற்ற பாடல்களுக்கு, நானே இசையமைத்து ஸ்வர சாகித்திய வடிவினில் 'பக்திரசக் கீர்த்தனைகள்' என்னும் பெயரிலான நூலாக – கீதவாஹினி இசைக் கல்லூரியின் வெளியீடாகப் பிரசுரித்துள்ளேன். இந்தப் பாடல்கள் பின்னர் என்னால் பாடப்பெற்று ஒலிப்பதிவு நாடாவாகவும் வெளியிடப்பட்டன.

மேலும் க.பொ.த (சாதாரண தரம்) வகுப்புக்குரிய வினா – விடை க.பொ.த (உயர்தரம்) வகுப்புக்குரிய வினா – விடை ஆகிய இரு நூல்களும் என்னால் ஆக்கப்பட்டு, கர்நாடக இசை கற்கும் மாணவர்களுக்குத் துணை நூல்களாகப் பயன்படும்வண்ணம் அச்சிடப்படுகின்றன. இந்த இரு நூல்களும் மிக விரைவில் மாணவர்களின் பயன்பாட்டுக்கு வந்துவிடும் என்பதையும் குறிப்பிடவிரும்புகிறேன்.

2004 ஆம் ஆண்டு யூன் மாதத்தில் தரம் 6 தொடக்கம் தரம் 11 வரையுள்ள வகுப்புக்களுக்குரிய செய்முறைப் பாடல்கள் அனைத்தும், ஒலிப்பதிவு நாடாக்களில் 4 பிரிவுகளாக ஒலிப்பதிவு செய்யப்பட்டு, யாழ்.கல்வி வலய, கல்வி அபிவிருத்திப் பிரிவினரால் வெளியிடப்பட்டுள்ளன.

இசைக்கு எமது தமிழர் சமுதாயத்தில் ஆதிகாலம் முதல் பிரதான பங்குள்ளது. தாலாட்டு முதலாக ஒப்பாரியீறாக – அதாவது பிறப்பு முதல் இறப்பு வரை எமது வாழ்வில் ஒவ்வொரு நிலையிலும் இசை வாழ்க்கையுடன் இரண்டறக் கலந்துள்ளன என்பது மறக்கப்படவோ, மறைக்கப்படவோ, மறுக்கப்படவோ இயலாத பேருண்மையாகும்.

இன்றைய இளைய சமுதாயத்தினர் இதை மறந்து, இசையை ரசிக்கும் அறிவை, ஆற்றலை, ஆர்வத்தை மறந்து வருகின்றனர் என்பது கசப்பான உண்மையாகும். எனவே இசை பயிலும் இளைய சமுதாயத்தினருக்குப் பாரிய பொறுப்பு உள்ளது. தரமான இசையை ரசிக்கும் அறிவையும், ஆற்றலையும், ஆர்வத்தையும் இளைய தமிழ்ச் சமுதாயத்தினரிடையே வளர்க்க வேண்டும் என்பது பாரிய பொறுப்பாகும்.

அடுத்து கலாவித்தகர் பட்டத்தையோ, டிப்ளோமாப் பட்டத்தையோ பெற்றுவிட்டு, இசையில் கரைகண்டுவிட்டதாக எண்ணிக் கொண்டு, எமது இளம் சந்ததியினர் காலத்தை வீணடிக்கிறார்கள். இந்தப் பட்டங்கள் ஒரு ஆரம்பமேயல்லாது, முற்றுப் புள்ளியல்ல என்பதை மனதில் நிலை நிறுத்திக்கொண்டு, இசையை – கர்நாடக இசையை, மென்மேலும் கற்றுத் தெளிந்து தேர்ந்திட முன்வரவேண்டும் என்றும் இளைய பரம்பரையினரிடம் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இந்தச் சந்தர்ப்பத்தில் எனது இசைப் பணிக்கு வித்திட்ட எனது ஆசிரியர்களான வ.பரமசாமி, செல்வி இராதாதேவி சபாபதி, எனது சகோதரர் ம.சந்திரசேகரம் முதலானோரை நன்றியுடன் ஒருகணம் நினைத்துத் துதிக்கிறேன்.

என் இசைப்பணியையும் பெரிதென மதித்து, என் இல்லம் தேடிவந்து, எனது இசைப்பணி பற்றியெல்லாம் மிக்க ஆர்வத்துடன் கேட்டறிந்த தங்களுக்கு எனது இதயம் நிறைந்த நன்றிகள் உரித்தாகுக. எனது இசைத் தொண்டு மென்மேலும் வளர, தொடர, பெருக, சிறக்க அருள்



மிகு பிரப்பங்குளம் மகாமாரி அம்பாள் என்றென்றும் என்துணை நிற்பாள் என்பது என் நம்பிக்கை எனக்கூறி, தன்னிரு கரங்களையும் குவித்து, தன்னிரு கண்களையும் மூடி வணங்குகிறார்.

நானும், கலைமகளின் பேரருட் துணையுடன் தங்கள் உடல், உள, நலம் மிகப்பெற்று இன்னும் பன்னெடுங்காலம் வாழ்ந்து, கர்நாடக இசையின் வளர்ச்சிக்கும், வளத்துக்கும் மென்மேலும் பற்பல தொண்டுகள் இயற்ற வேண்டும். இயற்றுவீர்கள் அத்துடன் இதுவரை அனைத்து விபரங்களையும் கூறி எம்முடன் ஒத்துழைத்தமைக்கு எமது நெஞ்சம் நிறைந்த நன்றிகள் எனக் கூறி விடைபெறுகிறேன்.

வயலூர் - முருகன்

# தூக்கம் நம் கண்களைத் தழுவட்டுமே!

வாழ்க்கை என்ற அழகான மண்டபத்தைத் தாங்கி நிற்கும் மூன்று தூண்கள். முறையான உணவு, நல்ல தூக்கம், நெறிப்படுத்தப்பட்ட தாம்பத்திய வாழ்க்கை ஆகும். இதில் முதல் தூணான உணவு பற்றி ஏராளமாகப் பார்த்துண்டு. இரண்டாவது தூணான தூக்கம் பற்றி பார்ப்போம்.

முறையான உணவு போல நல்ல தூக்கமும் உடலுக்கு ஊட்டம் தருகிறது. தூக்கம் என்பது பயிருக்கு தண்ணீர் பாய்ச்சுவதைப் போன்றதாகும். வளமாகப் பாய்ச்சினால் பயிர் செழிப்பாக வளரும். தூக்கம் – சொகுசான விடயமாகக் கருதப்படுகிறது. இப்போதைய சமூக வாழ்க்கையில், அதன் முக்கியத்துவம் குறைக்கப்பட்டுவிட்டது. ஆனால் தூக்கம் ஒருவருக்கு நீண்ட ஆயுளையோ, மரணத்தையோ தீர்மானிக்கின்ற தன்மை வாய்ந்தது. தூக்கம் வராமல் தவிக்கின்றவர்களுக்குத் தான் அதன் அருமை புரியும்.

தூக்கம் வராத இரவு – கால இராத்திரி என்று வர்ணிக்கிறார்கள். கால இராத்திரி என்பது, மரணத்துக்கு முந்தைய இரவில், சாவின் விளிம்பில் இருக்கும் மனிதன் தூக்கமின்றித் தவிப்பானே... அந்த இராத்திரியாகும். ஒருவருடைய சுகம், துக்கம், இளைத்துப்போகும் தன்மை, பலம், பலவீனம் இதையெல்லாமே தூக்கப் பழக்கவழக்கங்களால் தான் தீர்மானிக்கப் படுகிறது.

மனதுக்கும், உணர்வுகளுக்கும் தொடர்பு அறுந்து போகும்போதுதான், தூக்கம் வருகிறது. நாள் முழுக்க உழைத்து, மூளை களைப்படையும் போது, எமது கண்கள் பார்ப்பது மனதில் பதிவதில்லை. எமது காதுகள் கேட்பது மூளைக்குப் போதில்லை. எமது நாசி சுவாசிப்பது என்ன மணம் என்பது எமக்குத் தெரிவதில்லை.

நாள் முழுக்க தன் ஞாப சக்தியில் சேகரித்த விடயங்களை, செரிக்க மூளைக்கு ஒய்வு தேவை. தூங்கினால் மட்டுமே அவை ஈடாகிறது. அதிகமாக யோசனை செய்து, மூளை களைப்படையும் போதும், உடம்பு சோர்வடையும் போதும் விசக்கடி போன்ற காரணங்களாலும் நோய்வாய்ப்பட்டு இருக்கின்ற போதும், இரவு வேளையிலும் இப்படி நிறையக் காரணங்களால் தூக்கம் வருகிறது.

குழந்தைகள் பொதுவாக அதிகம் தூங்கும் காரணம், குழந்தைப் பருவத்தில் எல்லோருக்கும் கபம் அதிகமாகும். வயதானவர்களுக்கு வாதம் அதிகமாக இருக்கும். அதனால் வாதப் பிரச்சினைகளான மூட்டுவலி, தேய்மானம் என்பன வரலாம். வாதம் அதிகமாக இருக்கின்ற போது தூக்கம் வராது. அதனால் தான் வய



தானவர்கள் தூக்கமின்றித் தவிக்கிறார் கள்.

இரவானதும் படுத் துறங்கி, அதிகாலையில் எழும்புவது நல்லது. சராசரியாக ஒரு நாளில் எட்டு மணித்தியாலங் கள் தூங்குவது நல்லது. இரவில் சாப்பிட்ட உடன் தூங்கப்போகக் கூடாது. சாப்பிட்டு ஒன் றரை மணித்தியாலங்கள் கழித்து தான் தூங்க வேண்டும். அப்பொழுது தான் உடலில் எந்த நொந்தரவும் இல் லாமல் தூங்கலாம்.

மின்சாரம் இல்லாத காலத்தில் தூக்கம் இயல்பாக இருந்தது. இப்போது பதினொரு மணிவரையும் தொலைக்காட்சி நாடகங்கள் பார்த்து முடிந்து தூங்கினால், நாடகத்தில் வரும் கதாபாத்திரங்கள் பற்றிய கவலையில் எப்படித் தூங்க முடியும்.

இன்னும் சிலருக்கு இரவில் மட்டும்தான் வேலையுண்டு. அது வேறு பிரச்சினை. அதனால் பகலில் தூங்கிவேறு பிரச்சினை இரவில் விழித்திருப்பது தான் என் வாழ்க்கை. நான் என்ன செய்வது? என புலம்புகிறார்கள். இரவில் எட்டு மணி நேரம் தூங்க முடியாதவர்கள் பகலில் நான்கு மணிநேரம் தூங்கினாலேயே போதுமானது. ஆனால் பகல் தூக்கத்தை காலையிலேயே தூங்கிவிடவேண்டும். மதியச் சாப்பாட்டுக்குப் பிறகு தூங்குவது கூடாது.

காலையில் எண்ணெய் தேய்த்துக் குளித்துவிட்டு சூடாகப் பால் குடித்து பிறகு தூங்கினால் இரவு தூக்கத்தின் அதே பலனை அனுபவிக்கலாம். கட்டில் மெத்தை அதிக மிருதுவாகவோ, அதிக இறுக்கமாகவோ இல்லாமல் ஓரளவுக்கு மிருதுவாக இருந்தால் போதும். தலையணை அளவான உயரத்தில் இருப்பது நல்லது.

சிலர் கைகளை தலைக்கு அடியில் வைத்துக்கொண்டு தூங்குவார்கள். இதனால் கழுத்து எழும்பு தேய்வடைதல் கைமரமரப்பும் ஏற்படும். படுத்ததும் தூக்கம் வர சுலபமான ஒரு வழி. அன்று காலை முதல் மாலை வரை நடந்தவற்றை, சுகமான சம்பவங்களை மட்டும் நினைத்துப் பாருங்கள். உடனே தூக்கம் வரும்.

கிழக்கு உத்தமம், தெற்கு மத்திமம், மேற்கு சூலம், வடக்கு மரணம் என்று சொல்லு வார்கள். தலையை கிழக்குப் பக்கமாக வைத்துப் படுத்தால் சலனமில்லாத ஆழ்ந்த உறக்கம் வரும். தெற்குத் திசையில் வைத் துப்படுத்தால், உடற்களைப்பு நீங்கும் அள வுக்குத் தூங்க முடியும். மேற்குத் திசையில் தலை வைத்துப்படுத்தால், கொடூரமான கனவுகள் வரும். மனம் ஒய்வெடுக்க முடியாமல் குழப்பத்திலேயே இரவு கழியும். வடக்கு திசையில் தான் பூமியின் காந்த மண்டலம் இருக்கிறது. அந்தத் திசையில் தலை வைத்துப்படுத்தால், உடலில் இரத்த ஓட்டம் பாதிக்கப்படும். எரிச்சலும் குழப்பமுமாகவே இரவு கழியும். தூங்கின மாதிரியே இருக்காது.

சிலருக்கு எப்படிப்படுத்தாலும் தூக்கம் வராது. இப்படிப்பட்டவர்கள் உடற்பயிற்சி செய்து கொள்ளலாம். சூடான நீரில் குளித்தால், மாமிச சூப் குடித்தால், இரவில் புழுங்கள் அரிசிக் கஞ்சி குடித்தால் நல்ல சொகுசான தூக்கம் வரும். தயிரும் நல்ல தூக்க மருந்து. தூக்கம் வராதவர்கள் மட்டும் தயிர் சாப்பிட்டால் தூக்கம் வரும்.

பால் குடிப்பது, மனதுக்கு சந்தோசம் ஏற்படுத்தும் செயல்களைச் செய்வது, நல்ல நறுமணத்தை நுகர்வது, மிகவும் பிடித்தமான இசையைக் கேட்பது இவற்றால் கூட, தூக்கத்தை வரவழைக்கமுடியும். இரவில் முறையாகத் தூங்காவிட்டால் – உடல்வலி, கண் எரிச்சல், சோர்வு, தலைச்சுற்றல், தொடர்ச்சியான கொட்டாவி, மயக்கம், வாதக்கோளாறு என்பன அதிகமாகும்.

## அறிந்துகொள்ளுங்கள்

* வாழைத் தண்டை வட்டமாக நறுக்கி, எலுமிச்சைச்சாறு, உப்பு சேர்த்து ஆண்கள் தொடர்ச்சியாகச் சாப்பிட்டு வந்தால் சிறுநீரகக் கற்கள் தோன்றாது.
* அகத்தியிலை பித்தத்தைத் தணிக்கும். இரத்தக் கொதிப்பையும் கட்டுப்படுத்தும் மேலும் இவை பச்சையாகச் சாப்பிட்டால் வாய்ப்புண் குணமாகும்.
* காலில் முள்குத்தி பாதி முள் தங்கிவிட்டால் எருக்கலம் பாலை அந்த இடத்தில் பிழிந்துவிட முள் தானாக வெளியேறும்.
* பஸ்ஸில் பயணம் செய்பவர்கள் வாந்தி எடுப்பார்கள். நச்சீரகமும், ஏலக்காயும் விழுங்கினால் வாந்தி வராது.
* துளசி இலைகளையும், கற்பூரவள்ளி இலைகளையும் அவித்துக் குடித்தால் இருமல் குறையும். அத்துடன் தூதுவளை சேர்த்துச் சாப்பிட்டால் உடனடி நிவாரணம் கிடைக்கும்.

# பிஞ்சு முகத்தின் தேடல்

மழை விடாமல் கொட்டிக் கொண்டிருந்தது. இரண்டு நாளாகப் பெய்து கொண்டிருக்கிறது. எங்கும் ஒரே வெள்ளம். தெருவெல்லாம் வெள்ளம் பாய்கிறது. நான் எங்கள் வீட்டு வாசலில் நின்று கொண்டு மழையை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தேன். என் பார்வை எதிரே தெருவைக் கடந்து, முன்னால் இருந்த பள்ளக் காணியில் சென்று படிந்தது. அங்கே... கொட்டும் மழையையும் பாராமல் ஒரு விளையாட்டு நடந்து கொண்டிருந்தது. அம்மாவும், பிள்ளைகளும் ஆனந்தமாக நீராடிக் கொண்டிருந்தார்கள். அம்மா தன் பெரிய கைகளால் வெள்ளத்து நீரிலே துழாவிக்கொண்டு தலையை உள்ளே வைப்பதும், எடுப்பதுமாக துள்ளிக் கொண்டிருந்தாள். அவளைச் சுற்றி... ஒன்று இரண்டு மூன்று நான்கு எட! நான் எண்ணிமுடிய இன்னொரு கறுத்தப் பிள்ளை ... எல்லாமாக 5 பேர் அம்மாவின் மேல் தண்ணியை வாரி வீச, அம்மாவும் ஆனந்தமாக அவர்களுடன் விளையாட, எனக்கும் கால்கள் பரபரத்தன.



வீட்டுக்குள் எட்டிப்பார்த்தேன். அம்மா படம் பார்த்துக் கொண்டு முறுக்குச் சாப்பிட்டுக் கொண்டிருந்தாள். இது தான் நல்ல சந்தர்ப்பம். நான் கதவை மெல்லச் சாத்திவிட்டு, வாசற்படியை விட்டு கீழே இறங்கினேன். கால்களை நிதானமாக நிலத்தில் வைத்தேன். வெள்ளம் கால்களை நனைத் தது. மழையின் வேகம் கொஞ்சம் குறைந்து விட்டது. நான் தெருவோரத்துக்கு வந்து விட்டேன். இனிமேல் தெருவைக் கடக்க வேண்டும். என்பார்வை எதிரே நீந்தி விளையாடிக் கொண்டிருந்த அம்மாவையும், பிள்ளைகளை யும் நோக்கித் தாவியது. கால்களை வேகமாகச் செலுத்தித் தெருவைக் கடந்தேன். பள்ளத்தை நோக்கி நடந்தேன். என்னைக் கண்டதும் அம்மாவின் முகத்தில் பயம் தோன்றியது. ஏன் இவள் பயப்பட வேண்டும். நான் சின்னப் பிள்ளை தானே? கொஞ்சங் குண்டாக இருப் பேன். ஆனால், ஆண்டு இரண்டு தான் படிக்கிறேன். என் வயது 7 என்பது இந்த அம் மாவுக்குத் தெரியாது. கிட்டப் போய்ச் சொன் னால் நல்லது. நான் நினைத்துக் கொண்டு நடந்தேன். அந்த அம்மா நான் நெருங்கி வருவதைக் கண்டு, கைகளை நீட்டி குழந்தை களைக் கூப்பிட்டாள். கொஞ்சத் தூரம் போய் நீராடிக் கொண்டிருந்த பிள்ளைகள் அம்மாவிடம் ஓடி வந்தார்கள். எல்லோரும் வேக மாக ஓடினார்கள். எனக்கு ஒன்றும் புரியவில்லை. ஏன் இவர்கள் என்னைக் கண்டு பயப்படவேண்டும். என் முகத்தில் ஏமாற்றம். மெல்ல மீண்டும் தெருவைக் கடந்து வீட்டை நோக்கிவர, எதிரே வெள்ளத்தைக் கிழித்துக் கொண்டு வந்த வாகனம் என்னை மோத, நான் தூக்கியெறியப்பட்டு, மீண்டும் பள்ளத்து வெள்ளத்தில் வீழ்ந்தேன். ஐயோ! அம்மா! நான் அம்மாவைக் கூப்பிட என் நினை விழுந்தேன்...

மீண்டும் நான் கண்ணை விழித்தபோது, வைத்திய விடுதியில் இருந்தேன். என்னைச் சுற்றி அம்மாவும், வைத்தியரும், தாதிகளும் நின்றார்கள். குஞ்சு இப்ப எப்படி? அம்மா கேட்டாள். நான் ஒன்றும் பேசவில்லை. ஏன் பிள்ளை மழையுக்கை போனனி? வைத்தியர் அன்பாகக் கேட்டார் அவர் குரல் என் மனதைத் தொட்டது. நான் விளையாடப் போனனான். என்ன மழையுக்கை விளையாடப் போனனியே? அந்த அம்மாவும், பிள்ளையளும் நீந்தி விளையாடுவதைப் பார்க்க, எனக்கும் ஆசையாய் இருந்தது. அது தான் போனன். நான் சொன்னபோது எல்லோருடைய முகத்திலும் பயம் பரவியது. நான் போய் பிள்ளையைத் தூக்கியபோது, அங்கை ஒருவரும் இல்லை சொன்னவரைத் திரும்பிப் பார்த்தேன். அவர் தான் வாகனம் ஓட்டி வந்தவராம். வைத்தியர் சொன்னார். இவருடைய வாகனம் வந்த போது, நீ குறுக்கே வந்தாயாம். இப்ப எனக்குக் கோபம் வந்தது. நான் அந்த அம்மாவையும், பிள்ளைகளையும் பார்த்துக் கொண்டு வந்தன். வாகனம் வந்ததைக் கவனிக்கவில்லை. கொஞ்சம் காரமான குரலில் சொன்னேன். என்னை எல்லோரும் ஒரு வித கலவரத்தோடு பார்த்தார்கள். இன்றைக்கு எக்ஸ்றே எடுப்பம். வைத்தியர் சொல்லிவிட்டுத் தாதிமாருடன் போய் விட்டார். அம்மா அழத் தொடங்கினாள். ஐயோ! என்ரை பிள்ளைக்கு மூளை பழுதாப்போச்சுது. நான் அவளைப் பார்த்தேன் பாவமாக இருந்தது. தொலைக் காட்சியிலே நாடகம் பார்த்து அழுவதுபோல அழுது கொண்டிருந்தாள். நல்லா அழட்டும்!

மறுநாள் எக்ஸ்றே எடுக்கப்பட்டது. ஒரு பிழையும் இல்லை. எல்லாம் சரியாக இருந்தது. வைத்தியர் சொன்னார், நீ நாளைக்கு வீட்டுக்குப் போகலாம். எனக்கு மகிழ்ச்சி. போன உடனே அந்த அம்மாவையும், பிள்ளைகளையும் நான் போய்ப் பார்க்க வேணும். மனதில் திட்டம் போட்டேன். நான் ஒரு கிழமை வைத்திய விடுதியில் இருந்தேன். எனக்குப் பக்கத்துக் கட்டிலில் இருந்த பிள்ளையுடன் நெருக்கமான தோழியாகி விட்டேன். அவவின்ரை பேர் காவேரி. என் வயதுதான். அவளுக்குக் காலில் ஒரு கட்டு இன்னும் மாறவில்லை. நடக்கமுடியாது. நான் தான் அவளோடு கதைப்பேன். மற்றவர்கள் அதிகம் கதைப்பதில்லை. அவளுக்கு அப்பாவும், அம்மாவும் இல்லை. அம்மம்மாவுடன் தான் இருக்கிறாள். அவள் கதையை நான் கேட்ட போது, எனக்கு அவள் நிலை பரவாயில்லை போல இருந்தது.

நான் அவளிடம் சொன்னேன். அம்மா, அப்பா எனக்கு இருந்தும் இல்லாதது போலத் தான். அப்பா வெளிநாட்டில் அம்மா வீட்டில் இருந்தாலும் அவளுக்கு என்னைக் கவனிக்க நேரமில்லை. என் தோழி இடை மறித்துச் சொன்னாள் ஏன் நீ அம்மாவைப் பற்றி இப்படிச் சொல்கிறாய்? இந்த ஒரு கிழமையாக நான் நேரில் பார்க்கிறேன். உன்னுடைய அம்மா உன்னிலை எவ்வளவு பாசம் வைச்சிருக்கிறா. எனக்கு எரிச்சல் வந்தது. அவளிடம் சொன்னேன் எல்லாம் நடிப்பு. சின்னத் திரைப் படங்களிலை வாற நடிகர் மாதிரி என்ரை அம்மாவும் நடிக்கிறா. அவவுக்கு வீட்டிலை சமைக்கவே நேரமில்லை. நான் சொன்ன போது, என் தோழி வியப்புடன் என்னையே பார்த்துக் கொண்டிருந்தாள். என்னுடைய அம்மா எனக்குப் பின்னால் வந்து நிற்பது அவளுக்குத் தெரியும். ஆனால், எனக்குத் தெரியவில்லை. நான் தொடர்ந்தேன். அண்டைக்கு மழை பெய்தபோது, நான் ஒரு அம்மாவையும், பிள்ளைகளையும் பார்த்தன். அவர்கள் சந்தோசமாக மழையிலை விளையாட எனக்கும் ஆசைவந்தது. அது தான் நான் அங்கே போனன். தோழி கேட்டாள் அது சரி ஏன் அவையள் மழையிலை நின்று விளையாடவேணும். காய்ச்சல் வருமல்லவா. அந்த அம்மா - பிள்ளையளிலை கவனம் இல்லாத அம்மாவெல்லே!

எனக்கு அப்போது தான் என்னை ஒருவரும் விளங்கிக் கொள்ளவில்லை என்பது தெளிவாயிற்று. நான் கண்ட அம்மா ஒரு வித்தியாசமானவ. இதை இப்ப சொல்ல வேண்டும். நான் கண்ட அம்மா மனிதப் பிறவி இல்லை. என் தோழிக்கு ஒரே வியப்பாக இருந்தது. உனக்கு இன்னும் மூளை சரியாகவில்லை! அவள் சொன்ன போது எனக்கு அவளில் வெறுப்பு வந்தது. கட்டிலை விட்டுக் கீழே இறங்கினேன். அம்மா இப்போது முன்னால் வந்து என் பொருட்களை எடுத்து வைத்து என்னைக் கூட்டிப் போக ஆயத்தம் செய்தாள். நான் தோழியின் கட்டிலருகே போனேன். அவள் கையைப் பற்றினேன். அவள் கண்களில் நீர் வழிந்தது. நீயும் போனால் எனக்குப் பொழுது போகாது... அவள் குரல் தழுதழுத்தது. என்னால் அவளை நேராகப் பார்க்க முடியவில்லை. சட்டென ஜன்னலுக்கு வெளியே பார்த்தேன். அங்கே இருந்த தடாகம்! அது என்னை... நான் என்னை மறந்தேன்.

எட அந்த அம்மாவும், பிள்ளையளும் இஞ்சை வந்து குளிக்கினம். அம்மா ஓடி வந்து ஜன்னல் அருகில் நிண்டு பார்த்தாள். தாயும், பிள்ளைகளும் பள்ளத்தில் மகிழ்வாக... என்தோழிக்கு இப்போது என்கதை தெளிவாக, அவளும் அந்த அம்மாவையும், பிள்ளைகளையும் பார்த்தாள். டக் டக் வைத்தியரும், தாதிமாரும் வரும் காலடி ஓசைகள் கேட்டன. என் தோழியருகே வந்து வைத்தியர் அவள் காலைப் பார்த்து விட்டுச் சொன்னார். நீ இனிமேல் வீட்டை போகலாம். தோழி அவரைப் பரிதாபமாகப் பார்த்தாள். என்ரை அம்மா சொன்னாள் நான் கூட்டிக் கொண்டு போறன். அவள் குரல் புதிதாய் எனக்குக் கேட்டது. நான் தோழியின் கைகளைப் பற்றினேன். அவள் தடாகத்தில் விளையாடும் தாராவையும், குஞ்சுகளையும் காட்டினாள்.

**மனோன்மணி சண்முகதாஸ்**

# பிறந்த குழந்தையும் நோய்களும்



(சென்றவாரத் தொடர்ச்சி...)

### குழப்பமேற்படுத்தும் செங்கண்மாரி

செங்கண்மாரி என்பது உடலின் தோல் மஞ்சள் நிறத்திலும், கண்கள் வெள் ளை நிறத்திலும் இருப்பதை அறிகுறியாகக்கொண்டதாகும். இதைக் கல்லீரலினால் ஏற்படும் செங்கண்மாரி என்று சொல்கிறோம். புதிதாகப் பிறந்த குழந்தைகளுக்கு இருப்பதால், இது கல்லீரலில் ஏற்படும் மஞ்சட் காமாலை என்று அழைக்கப்படுகிறது.

பைலுரூபின் என்ற நிறமி அதிகமாக இருப்பதால், செங்கண்மாரி உண்டா கிறது. இது இரத்தத்தில் சிவப்பு அணுக்களில் ஏற்படும் பாதிப்பு காரணமாக உருவாகிறது. ஆனால், வழக்கமாகப் பிறந்த குழந்தையின் ஈரல்குலை பைலுரூபின்களை அழித்து விடுகிறது. சில சமயம் புதிதாக பைலுரூபின் உருவாகும்வரை அனைத்து பைலுரூபின்களையும் துடைத்து எடுத்துவிடும். இயற்கையான இந்தச் செயற்பாட்டில் முரண்பாடுகள் ஏற்படுவதன் விளைவுதான் செங்கண்மாரி.

### செங்கண்மாரியின் வகைகள்

01. பிசி யோலொஜிக்கல் செங்கண்மாரி

இந்தவகையான செங்கண்மாரி - பெரும்பாலும் குழந்தைகள் பிறந்த 2 ஆவது நாளில் ஏற்படும். 4 முதல் 5 நாள் வரை உச்சக்கட்டத்தில் இருக்கும் இந்த நோய், முதல் வாரம் முடியும் காலத்தில்தான் மஞ்சள் நிறம் மறையும். இதைப் பிசியோலா ஜிக்கல் செங்கண்மாரி என்று சொல்கிறோம். அளவு முறையாகச் சொல்வதனால், பைலுரூபின் அளவு 10 முதல் 16 மில்லி கிராமுக்குள் இருக்க வேண்டும்.

02. பேதலொஜிக்கல் செங்கண்மாரி

குழந்தை பிறந்த ஒரு வாரத்தில் பைலுரூபின் மிக அதிகமாக, அதாவது - 17 சதவீதத்துக்கு அதிகமாகச் செல்லும்போது ஏற்படும் செங்கண்மாரியை பேதலா ஜிக்கல் செங்கண்மாரி என்று சொல் கிறோம். பைலுரூபின் இப்படி எல்லை மீறிச் செல்வது, மூளைக்கு மிகவும் ஆபத் தானது. விஷத்தன்மை கொண்ட இந்தச் செங்கண்மாரி மூளையில் நிரந்தரப் பாதிப்பை உண்டு பண்ணுகிறது. இந்தப் பரிதாப நிலைமைக்குச் சில காரணங்களைச் சொல்லலாம். தாய் மற்றும் குழந்தை யின் இரத்தப் பிரிவுகள் முரண்படு தல், குழந்தையைச் சிலவகைத் தொற்று நோய்கள் தாக்குவது அல்லது ஈரல்குலை அமைப்பில் காணப்படும் குறைபாடுகள் ஆகியவற்றைக் குறிப்பிட்டுச் சொல்லலாம்.

03. ஜான்டிஸ் ஒஃப் பிரிமெச்சூரிட்டி

பெரும்பாலும் குறைப்பிரவசத்தில் பிறக்கும் குழந்தைகளுக்குத் தான் இந்தவகை காமாலை வருகிறது. ஏனெனில் பைலுரூபின்களைக் கையாளுவதற்கு ஈரல் குலைக்கு அதிக நேரம் எடுத்துக்கொள்கிறது.

04. ப்ரஸ்ட் மில்க் ஜான்டிஸ்

தாய்ப்பாலில் உள்ள குறிப்பிட்ட பொருள் பிறந்த குழந்தைகளுக்கு செங்கண்மாரி ஏற்படக் காரணமாகிறது. இது வழக்கமாகக் குழந்தை பிறந்த 4 ஆவது நாளில் ஏற்படும். ஆனாலும், சில சமயங்களில் நீண்ட நாள் கழித்துப் பயங்கரமாகலாம். இது போன்ற நிலையில் தாய்ப்பால் கொடுப்பதை நிறுத்திவிட்டு, 2 நாட்களுக்குப் புட்டிப்பால் கொடுக்கவேண்டும். பிரச்சினை சரியானதும் மீண்டும் தாய்ப்பால் கொடுக்கலாம்.

### சிகிச்சை

பிசியோலொஜிக்கல் செங்கண்மாரிக்குச் சிறப்பான சிகிச்சை எதுவும் தேவையில்லை. செங்கண்மாரியால் பாதித்த குழந்தையை நன்றாகக் கவனித்துக் கொண்டிருக்க வேண்டும். மஞ்சட் காமாலை அதிகரித்தால் உடனே குழந்தையைக் கொண்டு வந்து சூரிய ஒளியில் கிடத்திவிடவேண்டும். காலை அல்லது மாலையில் அரை மணி நேரம் இப்படிச் செய்தால் போதும். அதற்காக உச்சி வெயில் நேரத்திலோ, அதிக நேரம் வெயிலிலோ குழந்தையை விடக்கூடாது. அப்படிச் செய்தால் குழந்தையின் உடலில் விரைவில் நீர் வற்றுதல் ஏற்படும் அல்லது சூரிய ஒளியின் வெப்பம் காரணமாகக் காயங்கள் ஏற்படக் கூடும். (தொடரும்...)

# வட்டக்கச்சி மகாவித்தியாலயத்தின் பொன்விழா மலர் வெளியீடும் பரிசளிப்பு விழாவும்

வட்டக்கச்சி மகாவித்தியாலயத்தின் பொன்விழா கடந்த செவ்வாய்கிழமை காலை 8.30 மணிக்குப் பாடசாலை அதிபர் சி.சந்திரராசா தலைமையில் வித்தியாலய பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

வட்டக்கச்சி பிரதான வீதியில் இருந்து பிரதம விருந்தினர்கள் பாடசாலை மாணவர்களின் பாண்ட் வாத்தியத்துடனும், பாரம்பரிய நடனமான காவடியுடனும் விழா மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.

இந்த நிகழ்வின் மங்கள விளக்கை கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம், கரைச்சிப் பிரதேச சபை விசேட ஆணையாளர் பொன் நித்தியானந்தம், கிளிநொச்சி வலயப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் கி.சின்னராசா ஆகியோர் ஏற்றி வைக்க, தமிழீழத் தேசியக் கொடியை தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் நளன் ஏற்றி வைத்தார். அடுத்து அகவணக்கம் செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் - பாடசாலைக் கொடியை பாடசாலை அதிபர் சி. சந்திரராசா ஏற்றினார். விழாச் சுடரை கிளிநொச்சி மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் க.ஈழப்பிரியா ஏற்றினார்.

இந்த நிகழ்வின் தலைமை உரையைப் பாடசாலை அதிபர் சி.சந்திரராசா நிகழ்த்தினார். ஆசியுரையை சாந்தினி சேதுசர்மா, வட்டக்கச்சி வண பிதா.அகஸ்ரின் அடிகளார் ஆகியோர் நிகழ்த்தினர்.

நிகழ்வில் - பிரதம உரையை கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி. இராசநாயகம் நிகழ்த்தினார். சிறப்புரையை கிளிநொச்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் கி.சின்னராசா நிகழ்த்தினார். கௌரவ உரையை கிளிநொச்சி மாவட்ட கல்விக்கழகப் பொறுப்பாளர் ஜீவராஜ், தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் நளன், வட்டக்கச்சிப் பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் சோழநிலவன் ஆகியோர் நிகழ்த்தினர்.


அடுத்து பொன்விழா மலரின் முதற்பிரதியை, கிளிநொச்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் கி.சின்னராசா வெளியிட்டு வைக்க, கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் பெற்றுக் கொண்டார்.

சிறப்புப்பிரதியை பெற்றோர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

இந்த நிகழ்வின் நூல் ஆய்வை உதவிக் கல்விப் பணிப்பாளர் அ.அமிர்தலிங்கம், கிளிநொச்சி மத்திய கல்லூரி அதிபர் இ.இசை மகேந்திரன் ஆகியோர் நிகழ்த்தினர்.

அடுத்து பரிசளிப்பு விழா நிகழ்வு நண்பகல் 1.30 மணியளவில் ஆரம்பமானது. இதில் பொன் விழாவை முன்னிட்டு, நடத்திய போட்டிகளில் பங்கு பற்றிய மாணவ, மாணவிகள் 300 பேருக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன.

இறுதியாக கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.



# 3 நாள் காய்ச்சலில் ஒருவர் மரணம்

வட்டக்கச்சி பிரதேசத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இளம் குடும்பஸ்தர் மூன்று நாட்காய்ச்சலால் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

இந்தச் சம்பவத்தில் வட்டக்கச்சி சில்வா வீதி, 223 ஆம் இலக்கத்தில் வசிக்கும் செல்வரத்தினம் சுகிர்தன் வயது 35 என்பவரே மரணமானவராவர்.

இந்தச் சம்பவம் தொடர்பாகத் தெரியவருவதாவது- மூன்று நாட் காய்ச்சலால் வட்டக்கச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலைக்கு அனுப்பப்பட்ட போது, அங்கு சிகிச்சை பயனளிக்காமையால் அவர் அங்கு மரணமானார். (09)






மருதங்கேணி கிராமிய வைத்தியசாலை திறப்பு விழா நிகழ்வில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க.சிவநேசன் உரையாற்றுவதையும், வெளிநோயாளர் பிரிவுக் கட்டடத்தை பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி தெய்வேந்திரம் நாடாவை வெட்டித் திறந்து வைப்பதையும் படத்தில் காணலாம். (21)

# ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் புனரமைக்கப்பட்ட திட்டங்கள் கையளிப்பு

(கிளிநொச்சி)

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால், ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன், நிகொட் நிறுவனத்தின் கருத்திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும். சமூக அபிவிருத்தித் திட்டத்தில், பாரதிபுரம் கிராம அலுவலகப் பிரிவில் அமைக்கப்பட்ட பொது நோக்கு மண்டபம், பாலம், மதகுகள் மற்றும் புனரமைக்கப்பட்ட 4.6 கிலோ மீற்றர் நீளமான வீதிகள் ஆகியன கையளிக்கும் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை மாலை 3.30 மணியளவில் தமிழர் புனர்வாழ்வுக் கழக நிகொட் திட்ட இணைப்பாளர் க.ரவிக்காந் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வின் பொதுச்சுடரை சமூக பொருளாதார அபிவிருத்திக் குழுத் தலைவர் பொ.இராமலிங்கம் ஏற்றிவைக்க, தமிழீழத் தேசியக் கொடியை கிளிநொச்சி மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் காண்டீபன் ஏற்றிவைத்தார். அகவணக்கத்தைத் தொடர்ந்து, மங்கள விளக்கை நிகொட் திட்டப் பிரதிப் பணிப்பாளர் க.பார்த்தீபன், திட்டப் பொறியியாளர் கி.குகதாசன், உதவித் திட்டப் பணிப்பாளர் சோ.துஷ்யந்தி, கிராம சேவையாளர் க.வைரவநாதன், பாரதிபுரம் மகாவித்தியாலய அதிபர் க.இராசேந்திரம் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

இந்த நிகழ்வின் பொது நோக்கு மண்டபத்தை தமிழர் புனர்வாழ்வுக் கழக நிறைவேற்றுப் பணிப்பாளர் கே.பி. றெஜி நாடாவை வெட்டித் திறந்து வைத்தார். சமூக பொருளாதார அபிவிருத்திச் செயலகத்தை, நிகொட் திட்டப் பிரதிப் பணிப்பாளர் திறந்து வைத்தார்.

கிராம சேவையாளர் அலுவலகத்தை, தமிழர் புனர்வாழ்வுக் கழக நிகொட் திட்டப் பணிப்பாளர் சி.சுடர் திறந்து வைத்தார்.

நிகழ்வின் தலைமையுரையில், கிளிநொச்சி மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழக நிகொட் இணைப்பாளர் க.ரவிக்காந் உரையாற்றும் போது-

இந்தக் கிராமத்தில் மீளக் குடியமர்ந்த மக்களுக்கான உதவிகளை தமிழர் புனர்வாழ்வுக்கழகம் மேற்கொண்டு வந்த காலப்பகுதியில் நிகொட் சமூக அபிவிருத்தித் திட்டம் அமுல்படுத்துவதற்கு தெரிவு செய்யப்பட்டு, ஆசிய அபிவிருத்தி வங்கியால் 7 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இந்த நிதியில் உட்கட்டுமான வேலைகள், வருமான அதிகரிப்புத் திடடங்கள், குழுக்களை வலுப்படுத்தல் பயிற்சிகள், குடிநீர் வசதி என்பன மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என அவர் தனது உரையில் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் கருத்துரைகளை நிகொட் திட்டப் பிரதிப் பணிப்பாளர் க.பார்த்தீபன், கிராம சேவையாளர் க.வைரவநாதன், பாரதிபுர மகாவித்தியாலய அதிபர் க.இராசேந்திரன், கிளிநொச்சி மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் காண்டீபன், கிளிநொச்சி மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழக நிறைவேற்றுப் பணிப்பாளர் கே.பி.ஜெறி ஆகியோர் நிகழ்த்தினர்.

இந்த நிகழ்வைத் தொடர்ந்து சான்றிதழ் கையளிப்பு நிகழ்வு இடம்பெற்றது. இதில் பொதுமண்டபத்துக்கான சான்றிதழை, கிளிநொச்சி மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழக பணிப்பாளர் வ.றக்கன, புனரமைக்கப்பட்ட வீதிகளுக்குரிய சான்றிதழை நிகொட் திட்ட பொறியியலாளர் கி.குகதாசன், மதகு பாலம் ஆகியவற்றுக்கான சான்றிதழை தமிழர் புனர்வாழ்வுக்கழக நிகொட் திட்டப் பணிப்பாளர் சோ.துஷ்யந்தி ஆகியோர் பிரதேசசபை சார்பில் கிராம சேவையாளரிடம் கையளித்தனர்.

தொடர்ந்து மாலை நேரக் கல்விச் சிறார்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. நன்றியுரையை சமூக பொருளாதார அபிவிருத்திக்குழுச் செயலாளர் நிகழ்த்தினார்,

இதில் அயல் கிராமங்களின் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், கிளிநொச்சி மாவட்டத்தின் ஏனைய நிகொட் வேலைத் திட்டக் கிராமப் பணியாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# குன்றும் குழியுமாக காணப்படும் வவுனியா குட்செட் பிரதான வீதி

வவுனியா குட்செட் வீதி மிக மோசமான முறையில் சேதமடைந்து காணப்படுகிறது. இந்த வீதியை புனரமைப்பு செய்வதில் சம்பந்தப்பட்டவர்கள் ஆர்வம் காட்டவில்லை என இந்தப் பிரதேச மக்கள் விசனம் தெரிவித்தனர்.

நீண்டகாலமாக இந்த வீதி புனரமைப்பு செய்யப்படவில்லை. தற்போது சைக்கிளில் கூட பயணிக்க முடியாத நிலை தோன்றியுள்ளது. இந்தப் பிரதேசத்தில் அதிகளவான மக்கள் வாழ்ந்து வருவதால், இந்தப் பிரதான வீதியை உடனடியாக புனரமைப்பதற்கு சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## கலந்துரையாடல்

(கிளிநொச்சி)

தனியார் கல்வி நிலையங்களின் 2005 ஆம் ஆண்டுக்குரிய நிர்வாக செயற்பாடுகள் தொடர்பான முக்கிய கலந்துரையாடல்- நேற்றுமுன்தினம் பிற்பகல் 4 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட அரசியற்துறை அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் தனியார் கல்வி நிலைய உரிமையாளர்கள் கலந்துகொண்டனர்.

## பத்து இலட்சம் மரங்கள் அழிப்பு

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் கடந்த காலங்களில் இடம்பெற்ற போர் நடவடிக்கைகளால், 10 லட்சம் மரங்கள் அழிக்கப்பட்டுள்ளதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

1997 ஆம் ஆண்டு இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்ட ‘ஜெயசிக்குறு’ நடவடிக்கையின்போதும் மறறும் சிங்கள குடியேற்றத்துக்காகக் காடுகள் அழிக்கப்பட்ட போதும் பெருமளவான மரங்கள் அழிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

# சேதமடைந்த சனசமூக நிலையங்களை மக்கள் பாவனைக்கு விடுவதற்குத் தீர்மானம்

கடந்த கால இராணுவ நடவடிக்கை காரணமாக, வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள சனசமூக நிலையக் கட்டடங்கள், தளபாடங்கள் உட்பட சகல பொருட்களும் சேதமாக்கி அழிக்கப்பட்டன.

இந்துப் பிரதேசத்தில் சேதமடைநத அனைத்து சனசமூக நிலையங்களையும் புனரமைப்புச் செய்து, மக்கள் பாவனைக்கு விடவேண்டுமெனவும்.

இந்தப் பிரதேசத்தில் வெற்றிடமாகவுள்ள சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்கு ஒருவரை நியமித்து, உரிய நடவடிக்கையெடுக்க வேண்டுமெனவும் வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவின் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (21)

# பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்குட்பட்ட கிராமங்களில் மழை காரணமாக தொற்று நோய் ஏற்படும் அபாயம்

பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக் குட்பட்ட கிராமங்களில் வயிற்றோட்டம், நெருப்புக் காய்ச்சல், செங்கமாரி, டெங்கு ஆகிய நோய்கள் பரவக்கூடிய அறிகுறிகள் இருப்பதாக பளைப் பிரதேச சுகாதார பரிசோதகர்கள் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் தொடர்ச்சியாகப் பெய்த பெருமழை காரணமாக, இந்தப் பகுதிக் கிணறுகளில் மழை வெள்ளம் புகுந்துள்ளதுடன், சகல இடங்களிலும் மழைநீர் தேங்கி நிற்கிறது.

இடம்பெயர்ந்த மக்கள் ஒரே இடங்களில் கூடி இருப்பதாலும், சுகாதாரப் பழக்கவழக்கங்களைக் கடைப்பிடிக்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

பொதுமக்களைத் தொற்றுநோய்களிலிருந்து பாதுகாப்பதற்காக சுகாதாரப் பகுதியினர், பச்சிலைப்பளளி பிரதேசசபையினர் இணைந்து பொதுக்கிணறுகள், வீட்டுக் கிணறுகளுக்குத் தண்ணீரின் அளவுக்கு ஏற்ப குளோரின் இடும்பணியில் ஈடுபட்டிருப்பதுடன், பொது இடங்கள் வீதியோரங்களிலுமுள்ள குப்பைகளை அகற்றும் பணிகளிலும் ஈடுபட்டுள்ளனர்.

“மாரி காலத்தில் எம்மை அச்சுறுத்தும் ஆட்கொல்லி நோய்களிலிருந்து நம்மை நாமே பாதுகாக்க வேண்டிய பொறுப்புகள், வழிமுறைகள், அறிவுறுத்துரைகள்” கொண்ட துண்டுப் பிரசுரம் ஒன்றை அச்சிட்டு, பொதுமக்கள் மத்தியில் விநியோகித்து வருவதாகப் பச்சிலைப் பள்ளி பிரதேசசபை விசேட ஆணையாளர் இ.து.சிவராசா தெரிவித்தார்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*பொதுச்சார்புக் கொல்லும் புகழை அறிவினை*
*நிச்ச நிரப்புக்கொன் றாங்கு.*

திருக்குறள்

# நமது நோக்கு

## ஆட்சியாளரின் சுயத்தை வெளிப்படுத்தும் குமார் ரூபசிங்கவின் கருத்துக்கள்

இடைக்கால நிர்வாக அதிகார சபை தொடர்பான விடுதலைப் புலிகளின் நியாயமானதும், அவசியமானதுமான கோரிக்கையை ஏற்றுக் கொள்வது தொடர்பாகவோ அல்லது அதனடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பிப்பது தொடர்பாகவோ அரசு ஒரு தீர்க்க மான முடிவுக்கு வரமுடியாமல் காலம் கடத்தி வருவதற்குப் பல்வேறு காரணங்கள் கூறப்பட்டு வருகின்றன.

இடைக்கால நிர்வாக அதிகார சபைக்கான யோசனைகளை அரசு அங்கீகரித்தால் அது தனித் தமிழீழ நாடு உருவாவதற்கு வழி வகுத்துக் கொடுப்பதாக அமைந்து விடும் என்ற பேரினவாத சக்திகளின் இடைவிடாத ஓலங்கள் அரசுக்குப் பீதியையூட்டும் விடயமாக இருக்கின்றதென்பது ஆய்வாளர்கள் சிலரது கருத்தாகும்.

ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றி பலவீனமான ஓர் அரசாங்கத்தை அமைத்துள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் கூட்டணி சேர்ந்துள்ள அனைத்துக் கட்சிகளும் பேரினவாத மேலாதிக்க சித்தாந்தத்தில் ஊறிநிற்பவர்களாக இருப்பதுடன்- சமாதானம் தொடர்பான சகல நகர்வு முயற்சிகளுக்கும் வெளிப்டையான எதிர்ப்பினைத் தெரிவிப்பவர்களாகவும் இருப்பது தெரிந்ததே.

இந்த நிலையில் அவர்களால் – இனப்பிரச்சினைக்குத் தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றி வைக்கக் கூடிய வகையிலான எந்த ஒரு தீர்வையும் ஏற்றுக்கொள்ள முடியாது என்பது நிஜமாகும்.

எனவே, அரசாங்கத்தின் சமாதான எதிர்ப்பு நிலைப்பாட்டை மீறி அல்லது அதனைப் புறந்தள்ளி விட்டு ஜனாதிபதியாலும் சமாதானம் நோக்கி ஒரு அங்குலம் கூட முன்னேற முடியாது என்பதுதான் இன்றைய யதார்த்தமுமாகும்.

சமாதானத்திற்கும் – பேச்சுக்களை தொடரவும் தாம் எப்போதும் தயார் என ஜனாதிபதி தெரிவித்து வந்தாலும், அவரால் இடைக்கால நிர்வாக அதிகார சபை குறித்து விட்ட இடத்திலிருந்து பேச்சுக்களை ஆரம்பிக்க முடியாது என்பதும் – இன்னும் தெளிவாகக் கூறுவதானால் விடுதலைப் புலிகளிடம் எந்தவொரு நிர்வாகக் கட்டமைப்பையும் ஒப்படைக்கும் மனோநிலை அவருக்கு இல்லை என்பதும் தெளிவான விடயமாகும்.

அப்படி ஒரு இடைக்கால நிர்வாக கட்டமைப்பை – அது நிரந்தரத் தீர்வுக்கு வழிவகுக்கும் தன்மையைக் கொண்டதாக இருந்தாலும் கூட, புலிகளிடம் ஒப்படைப்பது வடக்கு – கிழக்கு தமிழர் தாயகப் பிரதேசம் சகலவகையிலும் மிகவிரைவாக வளர்ச்சி பெற வழிவகுத்து சிங்கள தேசத்தின் வளர்ச்சிக்கு சவாலாக மிளிர ஆரம்பித்து விடும் என்ற அச்சமானது, அரசுக்கும் ஜனாதிபதிக்கும் நிறையவே உண்டு என்று சிங்கள ஆய்வாளர்களே கூறத்தொடங்கியுள்ளமையை நாம் கவனத்தில் கொள்வது அவசியமாகும்.

அவர்களின் இந்தக் கூற்றுக்குக் காரணம் கடந்த இரு தசாப்த கால யுத்தத்திற்கிடையேயும், தமிழ் மக்கள் தமது வாழ்வியல் தன்மைகளை முற்றிலும் இழக்காது உறுதியாக நின்று போரின் அழுத்தங்களைப் புறமொதுக்கி வென்று நிமிர்ந்ததற்கு – அவர்களின் தலைமையான தமிழீழ விடுதலைப்புலிகளின் நிர்வாகக் கட்டமைப்பின் ஒழுங்கும், இறுக்கமும், நேர்த்தியான செயற்பாடுமே காரணம் என அந்த அரசியல் நோக்கர்கள் வெளிப்படையாகவே கூறத் தொடங்கியுள்ளமையானது சிங்கள ஆட்சியாளருக்கு எரிச்சல் தரும் விடயமாகிவிட்டது.

இந்த நிலையில், இடைக்கால நிர்வாகத்தை அவர்களிடம் ஒப்படைப்பது – தாங்கள் போரினால் சிதைக்க முயன்ற தமிழ் மக்களின் எதிர்காலத்தையும் தமிழ் மண்ணையும் எழுச்சிபெற்று உயர வைத்துவிடும் என்றே சிங்கள பேரினவாதம் நம்புகின்றது.

அதுவே சமாதானப் பேச்சுக்களை முன்னெடுப்பதற்கும், தேசிய நலனைப் பேணுவதற்கும் அவர்களே கூறும் தேசிய ஒருமைப்பாட்டைப் பாதுகாப்பதற்கும் கிடைத்துள்ள கடைசிச் சந்தர்ப்பத்திற்கு வாய்ப்பளிக்கவாவது இடைக்கால நிர்வாக அதிகார சபை குறித்துப் பேச அச்சப்படுவதற்குக் காரணமுமாகும்.

இந்தச் சூழலில் விடுதலைப்புலிகளின் நிர்வாகக் கட்டமைப்புக்களை அரசு அங்கீகரிக்க வேண்டும் என்று ஓர் குரல் சிங்களப் புத்திஜீவிகளில் ஒருவரிடமிருந்து எழுந்துள்ளது.

– இதனைக் கூறியிருப்பவர் கலாநிதி குமார் ரூபசிங்க ஆவார்.

– இன்றைய ஜனாதிபதியின் சகோதரி சுனேத்திராவின் முன்னாள் கணவர்.

– ஒரு காலத்திய... சிறிமாவோ ஆட்சிக்கால பலவேகய இயக்கத்தின் தலைவர்.

– சர்வதேச நெருக்கடிக்குள்ளான நாடுகளின் பிரச்சினைகள் குறித்தும் சமாதான முயற்சிகள் குறித்தும் ஆராய்ந்து வரும் இவரின் கருத்து இன்றைய கட்டத்தில் முக்கியத்துவம் கொண்டதாகின்றது.

சிங்கள முதலாளித்துவ சக்திகள் தமிழ் மக்களைத் தனியான தேசிய இனமாக அங்கீகரிக்க மறுப்பதுடன் – தொடர்ந்தும் அவர்களை அடக்கி ஆளவே விரும்புகின்றன என்றும் தெரிவித்தார்.

சமாதானத்தை வலியுறுத்தும் சக்திகள் சிங்கள ஆட்சியாளரின் இன்றைய நிலையின் உண்மைத்தன்மையை உணர்ந்து கொள்ள சிங்களவரான குமார் ரூபசிங்கவின் குரல் வழிகாட்டும் என்றே கூறவேண்டும்.

அவரின்குரல் மேலே குறிப்பிட்ட அரசியல் நோக்கர்கள் மற்றும் ஆய்வாளர்களின் கருத்து நிலைப்பாட்டுடன் பொருந்திப் போகின்றதல்லவா...!

## நாடும் நடப்பும்

செய்தி:- எந்த வகையிலேனும் சமாதானத்தை உருவாக்குவதே ஜனாதிபதியின் இலட்சியம் என்கிறார் மங்கள சமரவீர.




# குண்டுதாரியை அழைத்துச் சென்ற பெண் டக்ளசுடன் இரகசியத் தொடர்புடையவராம்

(கொழும்பு)

கடந்த சில மாதங்களுக்கு முன்பு கொழும்பில் இடம் பெற்ற மனித குண்டுவெடிப்பில் கொல்லப்பட்ட பெண்ணைக் கூட்டி வந்தவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் இரகசிய உறவுள்ளவர் என்றும், மாதாந்தம் அவருக்கு 7 ஆயிரம் ரூபாவை அமைச்சர் டக்ளஸ் வழங்கி வந்தார் என்றும், பொலிஸ் விசாரணைகளில் தெரிய வந்ததாக இணையத் தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதுவரை ஊடகங்களுக்குக் கசியாத பல தகவல்களை உள்ளடக்கியுள்ள இந்தச் செய்தியில், குறிப்பிட்ட பெண் டக்ளசுடன் இரகசியத் தொடர்புடையவர் என்றும் அவரே மனித குண்டுத்தாரியை கூட்டிவந்திருந்தார் என்றும் அவர்கள் நீர்கொழும்பிலுள்ள ஒரு நட்சத்திர விடுதிக்கு அன்றிரவு செல்வதற்கே திட்டமிட்டிருந்ததாகவும், பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அமைச்சர் டக்ளஸ் அரசாங்க இராணுவத் துணைப் படையில் - 1,100 பேருக்கு மேல் உள்ளதாகக் கூறி அவர்களுக்குரிய சம்பளத்தை அரசிடமிருந்து பெறுவதாகவும் தெரிவித்துள்ளதோடு, மாதாந்தம் நபரொருவருக்கெனப் பெறப்படும் 10 ஆயிரம்ரூபா சம்பளவீதம் மாதமொன்றுக்குப் பல லட்சக்கணக்கான ரூபாவை அவர் கையாடியிருப்பதாகவும் கூறப்படுகிறது.

அரச இராணுவத் துணைப்படையின் அங்கமான ஈ.பி.டி.பி. உறுப்பினர்களுக்கான சம்பளம் - ஈ.பி.டி.பி. மூலமே வழங்கப்படுவதென்றும் அந்தச் செய்தியில் மேலும் கூறப்பட்டுள்ளது.

# கோண்டாவில் டிப்போவுக்கு மேலும் 30 புதிய பஸ்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் போக்குவரத்துச் சேவைகளில் நிலவி வரும் நெருக்கடிகளைத் தீர்த்து வைக்கும் வகையில், வட பிராந்தியப் போக்குவரத்து சபையின் சேவைகளை விஸ்தரிப்பதற்கு 30 பஸ்கள் வரவுள்ளன.

யாழ்.குடாநாட்டிலுள்ள பல்வேறு பகுதிகளில் இடம் பெற்றுவரும் வடபிராந்தியப் போக்குவரத்து சபையின் பஸ் சேவையில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையால் வடமராட்சி, தென்மராட்சி , தீவகம் ஆகிய பகுதி மக்கள் பெரும் சிரமங்களை அனுபவித்து வருகின்றனர்.

இது குறித்து அந்தப் பகுதி மக்கள் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் செய்த முறைப்பாட்டைத் தொடர்ந்து, கூட்டமைப்பினர் இதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளனர்.

இந்த அடிப்படையில் இலங்கை மத்தியபோக்குவரத்துச் சபையில் இருந்து உடனடியாக 30 பஸ்கள் யாழ். குடாநாட்டுக்கு எடுத்துவரப்படவுள்ளன. (17)

# கரவெட்டியில் மீள்குடியமர்ந்தோருக்கு யு.என்.எச்.சி.ஆர் நிறுவனம் உதவி

(நெல்லியடி)

யாழ்.குடாநாட்டிலிருந்து இடம்பெயர்ந்து, வன்னிக்குச் சென்று வந்து, மீள்குடியேறிய 1500 ரூபாவுக்குக் குறைவான வருமானம் பெறும் கரவெட்டிப் பிரதேசசெயலகப் பிரிவைச் சேர்ந்த வறிய குடும்பங்களுக்கு - அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் நிவாரணப் பொருட்கள் பலவற்றை வழங்கிவருகிறது.

இந்த நிவாரணப் பொருட்கள் இந்தமாதம் 25 ஆம் திகதிவரை தொடர்ச்சியாக நாளாந்தம் கரவெட்டிப் பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கப்படவுள்ளது.

மொத்தமாக 355 குடும்பங்கள் இந்த நிவாரணத்தைப் பெறவுள்ளன. கரவெட்டிப் பிரதேச கிராம சேவை அலுவலர் பிரிவுகள் அனைத்திலிருந்தும் முன்னுரிமை அடிப்படையில் இதற்காக வறிய குடும்பங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. இந்தக் குடும்பங்களில் 780 குடும்பங்களுக்கு உலர் உணவு இல்லாத நிவாரணப் பொருட்களும், 575 குடும்பங்ளுக்கு விவசாய உபகரணங்களும் வழங்கப்படவுள்ளன. (13)

# ஆபத்தான நிலையில் உள்ள கற்கோவளம் பாடசாலைக் கிணறு

(வடமராட்சி)

வடமராட்சி கற்கோவளம் மெதடிஸ்த தமிழ்க் கலவன் பாடசாலையிலுள்ள கிணறு, மிகவும் அபாயகரமாகவுள்ளது 20 அடி ஆழம்வரை நீர் நிறைந்துள்ள இந்தக் நிலத்தில் இருந்து ஒரு அடியே உயர்ந்துள்ளதோடு, கிணற்றை மூடிப் பாதுகாப்பான எந்தத் தடுப்பும் போடப்படாததால், மாணவர்கள் ஆபத்தை எதிர் கொண்டுள்ளனர்.

இங்கு கல்வி கற்கின்ற மாணவர்கள் ஆண்டு ஒன்று முதல் ஐந்து வரையான மாணவர்களே என்பதோடு இவர்களை எந்த நேரமும் அதிபரோ, ஆசிரியர்களோ கண்காணிக்க முடியாது.

இந்த நிலையில் பாடசாலை நிர்வாகமோ, பாடசாலை அபிவிருத்திச் சங்கமோ, வலயக் கல்வி பணிமனையோ எதுவித நடவடிக்கையையும் எடுக்காமல் இருப்பதால் மக்கள் பெரும் விசனமடைந்துள்ளனர். (20)

# பேச்சுக்களை நடத்தாமல் இருக்கவே ஐ.தே.கவும் – புலிகளும் விரும்புகின்றனர்

## ஜே.வி.பி குற்றச்சாட்டு

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் வரையில் சமாதானப் பேச்சுவார்த்தைகளை நடத்தாமல் இருக்கவே ஐக்கிய தேசிய கட்சியும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும் முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக ஜே.வி.பி. குற்றம் சுமத்தியுள்ளது.

நேற்று முன்தினம் அந்தக் கட்சியின் அரசியல் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் -

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் இருக்குமானால், அதைக்கொண்டு தமது தமிழீழ இலக்கை அடைய முடியுமென விடுதலைப் புலிகள் எண்ணுகிறார்கள்.

எனவேதான் ஜனாதிபதியின் பதவி இன்னும் ஒரு வருடம் வரை இருப்பதால், சமாதானப் பேச்சுவார்த்தைகளை நடத்த முடியாதென அவர்கள் கூறுகிறார்கள். இந்த நிலையில் ஜே.வி.பி.யைப் பொறுத்த வரையில் சமாதானப் பேச்சுவார்த்தைகளின் மூலமே இனப்பிரச்சினைக்குத் தீர்வு எட்டப்பட வேண்மென்ற நிலைப்பாட்டில் இருக்கிறது.

ஆனால், நிபந்தனைகளுடன் கூடிய இடைக்கால தன்னாட்சி அதிகார சபையை அடிப்படையாகக் கொண்டு, பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதை தமது கட்சி ஏற்றுக் கொள்ளவில்லையெனவும், ஜே.வி.பி.யின் அரசியல் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளது.

# இவ்வார பலன்
## 19-11-2004 - 25-11-2004

| | | | |
|---|---|---|---|
| | ராகு | | |
| சந் யுரே | 21 ப. 11.07மீன -சந்<br>23 மா.6.43 மே -சந்<br>24 ப. 9.05 தனு-புத<br>25 பி. இ.4.30 இட-சந் | | சனி |
| நெப் | | | |
| | சூ, புத | செவ், சுக் கேது | குரு |

### மேடம்
*(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்)*



மேடராசியில் பிறந்தவர்களுக்கு வியாழசுகம் குறைவு. குடும்ப வாழ்க்கையில் நிம்மதி குறையும். அங்கத்தவர் களிடையே கருத்து வேற்றுமை அதிகரிக்கும். தேகசுகம் குறையும். அன்றாடம் செலவுகள் அதிக மாகும். வைத்தியச் செலவும் தவிர்க்க முடியாம லிருக்கும். பிள்ளைகளால் சுகம் ஏற்டாது. திருமணப் பேச்சுக்கள் இழுபறி நிலையில் இருக கும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப பளு அதிகமாகும். அதிகாரிகளின் கெடுபிடிகளும் இருக்கும். வியாபாரிகளுக்கு விற்பனை மத்திம மாகும். களவு போன்றவற்றை யிட்டு அவதானமாக இருக்கவும். மாணவர்க ளுக்கு கல்வியில் அக்கறையின்மை காட்டும்.

### இடபம்
*(கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்)*



இடபராசியில் பிறந்தவர்களுக்கு வியாழ சுகம் இருப்பதால் குடும்ப வாழ்க்கையில் சிறப்பு ஏற்படும். எண்ணிய கருமங்கள் கைகூடும். கடன் தொல்லைகள் இருந்தால் அவை தீரும். பணவருவாய் திருப்தி யாக இருக்கும். பிள்ளைகளால் உதவியும். பணவருவாயும் கிட்டும். தொழில்துறைகள் சிறப்பாக நடக்கும். உத்தி யோகத்தர்களுக்கு அதிகாரிகளின் ஒத்துழைப் புக் கிடைக்கும். சக உதவிகளும் உண்டு. திரு மணப் பேச்சுக்கள் நற்பலனைத் தரும். வியா பாரிகளுக்கு லாபம் தாராளமாகக் கிடைக்கும். பழைய முதலீடுகள் விற்பனையாகும். மாணவர்கள் கல வித்துறையில் நல்ல முன்னேற்றம் காண்பர்.

### மிதுனம்
*(மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் பாதங்கள் )*



மிதுனராசியில் பிறந்தவர்களுக்கு குடும்ப வாழ்க்கையில் சில குழப்பங்கள் தோன் றும். உறவினர்களி டையே கருத்து வேற்று மைகள் ஏற்படும். பண வருவாய் இருப்பினும் செலவுகள் கட்டுக்கடங் காமல்போகும். தேகாரோக்கியததையிட்டுக் கூடியகவனம் தேவை. திருமணம் சம்பந்தமான பேச்சுக்கள் காலதாமதத்தை ஏற்படுத்தும். உத்தியோகத் தர்களுக்கு தொழில் மாற்றங்கள் வசதிக்குறை வுகள் முதலியன காட்டும். சக உத வியாளர்க ளின் ஒத்துழைப்பும் கிடையாது. வியாபாரிக ளுக்கு வியாபாரம் மந்தநிலையிலேயே நடக்கும். கொடுக்கல் வாங்கல்களில் அவதானம் தேவை. வங்கி உதவிகள் உரிய நேரத்தில் கிடையாமற் போகலாம். மாணவர்களுக்கு சிரத்தையும் ஊக்கமும் தேவை.

### கடகம்
*(புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)*



கடகராசியில் பிறந்தவர்களுக்கு ஏழ ரைச் சனியின் தாக்கம் உண்டு. குடும்ப வாழ்க்கையில் சிறு பூச ல்கள் ஏற்படும். இன பந்துக்களிடையே மனக்கசப்புக்கள ஏற் படலாம். பணவரவு ஓரளவு இருககும். புத் திர்களால் செலவினங்கள் அதிகமாகும். தேகா ரோக்கியத்தைப் பேண வேண்டும். திருமணப் பேச்சுக்கள் இழுபறியைக் கொடுக்கும். உத்தியோகத்தர்களிடம் அதிகாரிகள் குற்றம் காண்பர். கடுமையாகவும் நடந்து கொள்வர். அலுவலகங்களில் தொல்லைகளும் கூடும். வர்த்தகர்களுக்கு வியாபாரத்தில் குறைந தலாபமே கிடைக்கும். அயல வியாபாரிகளு டன் போட்டி ஏற்படலாம். முதலீடுகளைத் தவிர்க்கவும். மாணவர்கள் கல்வியில் கடும் முயற்சி எடுக்கவேண்டும்.

### சிங்கம்
*(மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதம்)*



சிங்கராசியில் பிறநதவர்களுக்கு குடும்ப வாழ்க்கை சிறப் பாக அமையும். கண வன் மனைவி உற வில் அந்நி யோன்யம் இருக்கும். இனபந்துக் களுடன் இருந்த மனக் கசப்புகள் மறையும். பொருளாதாரம் திருப் தியளிக்கும். புத்திரர்களால் பொருள்வரவு ஏற்படலாகும். திருமணப் பேச்சுக்கள் வெற் றியைத்தரும். உத்தியோகம் வகிப்பவர்களுக்கு அதிகாரிகள் ஒத்துழைப்பு நல்குவர். தொழில் சிறப்பு, ஊதிய உயர்வு கிட்டும். வர்த்தகர் களுக்கு வியாபாரம் சிறப்பாக நடக்கும். பழைய முதலீடுகள் விற்பனையாகி பணம் சேரும். ஆடம்பரப் பொருட்கள் விற்பனை செய்வோர் கூடிய லாபம் பெறுவர். மாணவர்கள் முன் னேற்ற மடைவர். கல்வி உயர்ச்சியும் ஆசிரி யர்களின் ஆதரவும் உண்டு.

### கன்னி
*(உத்தரம் 2, 3, 4 ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1, 2 ஆம் பாதங்கள்)*



கன்னிராசியில் பிறந் தவர்களுக்கு குடும்ப வாழ்க்கையில் சில தகரா றுகள் தோன்றி மறையும். உறவினர்களுடன் மனத் தாக்கங்கள் ஏற்படும். குடும்பச் செலவினங்கள் அதிகரித்து பொருளாதார ரீதியில் சிக்கல்கள் தோன்றும். தேகசுகமும் இடையிடையே பாதிக் கப்படலாம். திருமண விடயங்கள் காலதாமத்தை ஏற்படுத்தும். உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகளால் தொல்லைகள் ஏற்படும். நிம்மதிக் குறைவு காட்டும். உயர்ச்சிகள் தாமதப்படும். வர்த்தகர்களுக்கு பழைய முதலீடுகள் விற்பனையாகாமல் தேங்கிக் கிடக்கும். வியாபாரமும் நட்டததிலேயே நடக கும். மாணவர்கள் கல்வியில் நாட்டம் குறைந்து காணப்படுவர்.

### துலாம்
*(சுவாதி , விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள் சித்திரை 3 ஆம், 4 ஆம் பாதங்கள்)*



துலாராசியில் ஜனனமானவர்க ளுக்கு குடும்ப வாழ் வில் நன்மைகள் பல கிட்டும். தொடங்கும் கருமங்கள் வெற்றி யைக் கொடுக்கும். திடீர் பொருள் வரவு ஏற்படலாம். தேகா ரோக்கியம் சீராக இருக்கும். பிள்ளைகளால் உதவி உண்டு. பெரியோர்களின் நட்புக் கிடைக்கும். விவாகப் பேச்சுக்கள் முன்னேற்றம் காணும். உத்தி யோகத்தர்களுக்கு உதவிகள் கிடைக்கும். அபிலாசைகள் நிறைவு பெறும். வியாபாரி களுக்கு ஓரளவு லாபம் உண்டு. வாடிக்கை யாளர்கள் புதிதாக வந்து சேருவார்கள். அயல் கடைகளுடன் இருந்த பகைமைகள் நீங்கி விடும். மாணவர்கள் கல்வியில் மேன்மையடை வார்கள். சிலருக்கு வெளிநாட்டுக் கல்வி அனுகூல மாகும்.

### விருச்சிகம்
*(விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை)*



விருச்சிகராசியில் பிறந்த அன்பாகளுக்கு குடும்பத்தில் பல சிறப் புக்கள் காணும். இன பந்துகளுடனும், அயலவர்களுடனும் கொண்டாட்டங்கள் அதிகரிக்கும். புத்திரர் களின் முனனேற்றம் சிறப்பைத் தரும். பண வருவாய் அதிகரிக்கும். வீட்டில் சுப நிகழ்வுகள் நடக்கும். விவகப் பேச்சுக்கள் நல்ல முன் னேற்றத்தைத் தரும். உத்தியோகத்தர்க ளுக்கு நல்ல முன்னேற்றங்கள் கிட்டும். அதி காரிகளின் ஆதரவுகள் கிட்டும். வர்த்தகர் களுக்கு வியாபாரம் சிறப்பாக நடக்கும். வங்கி உதவிகள் உரியநேரத்தில் கிடைக்கும். பண வருவாயும் நன்கு அமையும். மாணவர்களுக்கு முன்னேற்றமும், சித்திகளும் உண்டு.

### தனுசு
*(மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம்)*



தனுராசியினருக்கு அட்டமத்துச் சனியும், பத்தில் வியாழனும் நடக்கிறது. குடும்ப வாழ்க்கையில் பல இனனல்கள் ஏற்படும். எந்தக்கருமத்தையும் சிந்தித்துச் செயற்படுத் துவது நன்று. பொரு ளாதாரம் இருந்தாலும் செலவுகள் கட்டுக் கடங்காமல் போகும். தேகாரோக்கியம் பாதிக் கப்படும். வைத்தியச் செலவுகளும் அதிகரிக் கும். உறவினர்களிடையே பகைமை உணர்வு தோன்றும். விவாக முயற்சிகள் இழுபறி நிலை யைக் காட்டும். உத்தியோகத் தர்களுக்கு வேலைப்பளு அதிகமாகும். அதிகாரிகளும் சீறிச்சினப்பர். பக்க உதவிகளும் கிடையாது. வர்த்தகர்களுக்கு இலாபம் கிடையாது. பண நெருக்கடிகள் கூடுதலாக இருக்கும். மாண வர்களுக்கு ஊக்கமின்மையும். நண்பர்களுடன் தகராறும் ஏற்படும்.

### மகரம்
*(உத்தராடம் 2, 3, 4 ஆம் பாதங்கள் திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்)*



மகரராசியினருக்கு குடும்பத்தில் முன் னேற்றங்கள். உண்டு. இன பந்துக்களுடன் கொண்டாட்டம் அதி கரிக்கும். பணவரு வாய் சிறப்பாக இருக் கும். புத்திரர்களால் முன்னேற்றம் ஏற்படும். வெளியூரி லிருந்து எதிர்பாராத பணவருவாய் கிடைக்கும். தேகசுகம் நன்றாக அமையும். மங்கல வாழ்க்கையை எதிர்பார்த்திருப் போருக்கு அனுகூலமான பலன் கிட்டும். உத் தியோகத்தர்களுக்கு மதிப்புமரியாதை உயரும். கீழ் உத்தியோகத்தர்களும், அதி காரிகளும் ஒத்துழைப்பு நல்குவர். வர்த்தர் களுக்கு வியாபாரம் சிறப்படையும். பணமும் சேரும். மாணவர்கள் நல்ல முன்னேற்றம் காண்பர். உயர் கல்வியில் பட்டங்களும் கிடைக்கலாம்.

### கும்பம்
*(அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ஆம் பாதங்கள)*



கும்பராசியில் பிறந்தவர் களுக்கு இவ வாரம் நன்மை தீமை கலந்த பலன்களே காணும். குடும்பத்தில் கருத்து வேற்றுமைகள் தோன் றினாலும், உடனுக் குடன் திருத்தம் ஏற் படும். கருமங்களை நிறைவேற்றுவதில் வீண் அலைச்சல், சிரமங்கள் ஏற்படும். எதிர்பாராத செலவுகள் வந்து சேரும். விவாகப் பேச்சுக்கள் காலதாம தத்தைக் காட்டும். உத்தியோகத் தர்களுக்கு வேலைப்பளு, நிம்மதிக் குறைவு காட்டும். சக ஊழியர் உதவி செய்வார்கள். வியாபாரிகளுக்கு லாபம் குறைவாகவே இருக்கும். கொடுத்த கடன்களை திரும்பப் பொறுவது கஷ்டம். மாணவர்கள் கடும் முயற்சி எடுத்தால் முன்னேற்றம் பெறுவர்.

### மீனம்
*(பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி)*



இவர்களுக்கு குடும்பத்தில் இன சனக் கொண்டாட் டங்கள் அதிகரிக்கும். எடுத்த கருமங்கள் தாமதமின்றி நிறை வேறும். பண வரு வாய் பிரச்சினைத ராது. புத்திரர்களால் நற்பலன்கள் உண்டு. ஆடம்பர வாழ்வில் நாட்டம் அதிகரிக்கும். தேகாரோக்கியம் பாதிப்படையாது விவாகப் பேச்சுக்கள் வெற்றியளிக்கும். உத் தியோகத் தர்களுக்கு அரசியல் லாபங்கள் உண்டு. பதவி உயர்வுகளும் ஏற்படலாம். வர்த்தகர் களுக்கு வியாபாரம் சிறப்பாக நடக்கும். வாடிக்கையாளர்கள் பெருகுவார்கள். மாண வர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பர். உயர்கல்வி அனுகூலமாகும்.

---

**செய்திக்கட்டுரை...** ஸ்ரனிஸ்லாஸ்

# எமது பிரதேசத்தில் அழிந்துபோகும் கடல்வளங்களைப் பாதுகாப்போம்

(நேற்றைய தொடர்ச்சி)



1983 ஆம் ஆண்டிலிருந்து 2002 ஆம் ஆண்டு வரை விடுதலைப் புலிகளுக்கும், இலங்கை அரசுக்கும் இடையிலான யுத்தம் காரணமாக, தமிழீழத்தின் கடற்பிரதேசம் முழுவதும் வடபகுதிகளின் கடற்தொழிலாளர்களுக்கு மறுக்கப்பட்ட, மறைக்கப்பட்ட பிரதேசமாக்கப்பட்டிருந்தது.

அதேவேளை, தென்னிந்திய தமிழ்நாடு மாவட்டங்களைச் சேர்ந்த மீனவர்கள் - தங்கள் பாரிய இழுவைப் படகுகளில் பல ஆயிரக்கணக்கில் வந்து, வடபகுதியின் - நெடுந்தீவு, பாலைதீவு, பேசாலை, வடமராட்சிக் கரையோரங்கள்வரை கடலின் செல்வங்களையும், வளங்களையும் வகை தொகையின்றி இரவு பகலாகச் சூறையாடிச் செல்வதைக் கண்டு மீனவர்கள் செய்வதறியாது கண்ணீர்விட்டழுதனர், புலம்பினர். இவையெல்லாம் அரசாங்கத்துக்கோ அரச படைகளுக்கோ தெரியவில்லை. தமிழ் இனத்தை அழிப்பது ஒன்றே குறிக்கோளாகக் கொண்ட படையினர் வளங்கள் அழிக்கப்படுவதையும், சூறையாடப்படுவதையும் பூரண சம்மதத்துடன் பார்த்துக் கொண்டிருந்தனர்.

வடபகுதி மீனவர்களையும் தமிழ்நாட்டு மீனவர்களையும் மோதவிட்டு வேடிக்கை பார்ப்பதுபோலவே அவர்களது நடவடிக்கைகள் அமைந்துள்ளன. வெறும் கண்துடைப்புக்காக அவ்வப்போது ஒருசில படகுகளைக் கைப்பற்றிய போதும், முழுமையாக தமிழ்நாடு மீனவர் படகுகளின் வருகையைக் கட்டுப்படுத்தத் தவறியே வந்துள்ளனர். இந்தச் சூழ்நிலை தமிழக மீனவர்களுக்கு ஒரு சாதகமான நிலையாயிருந்ததால் தாராளமாக வடபகுதிக் கடற்பரப்புக்குள் வந்து தம் கைவரிசையைக் காட்டினர்.

வளமான தனது செல்வத்தால் குறைவில்லாமல் காத்துவந்த கடலன்னை, இருபது வருடங்களுக்கு மேலான காலப்பகுதியில் கடற்படையினரின் துணையுடன் பல ஆயிரக்கணக்கான மீனவர்களின் பாரிய இழுவைப் படகுகளின் கோரப்பற்களால் குத்திக் குதறப்பட்டுக் குற்றுயிராக்கப்பட்டுள்ளார்கள். அள்ள, அள்ளக் குறையாமல் தந்து வடபகுதிக் கடற்தொழிலாளர்களை வாழவைத்த கடற்பிரதேசம், வளம் எல்லாம் அழிக்கப்பட்டு கட்டாந்தரையாக மாறிவிட்டது. இருபது வருடங்களுக்க மேலாகப் போரினால் அலைக் களிக்கப்பட்டு அநாதைகளாக அலைந்துவந்த தமிழ்ச் சகோதரர்களுக்குத் தமிழ்நாட்டு மீனவர்களால் கிடைத்த பரிசு இதுதான்.

வடபகுதியைச் சேர்ந்த மீனவர்களுக்குக் கடுமையான கட்டுப்பாடுகளையும், கெடுபிடிகளையும் செய்துவரும் இலங்கை அரசும் கடற்படையினரும், இந்திய மீனவர்கள் மட்டில் இவ்வாறான மெத்தனப்போக்கைக் கடைப்பிடித்து வருவது பெருங்கோபத்தையும், எரிச்சலையும் ஊட்டுவதாகவே அமைகின்றது.

வடபகுதிக் கடல்வளங்களை மீட்கவும் அதை மறுசீரமைக்கவும் எம்மால் முடிந்தவற்றைச் செய்யத் தயாராக வேண்டும். இதற்கு அனுசரணையாகப் பல உடனடித் தீர்மானங்களை எடுத்து அவற்றை விரைவில் நடைமுறைப்படுத்த வேண்டும். அவையாவன -

- வடபகுதிக் கரையோரங்களில் இந்திய இழுவைப் படகுகள் இழுவைமடித் தொழிலில் ஈடுபடுவதை முற்றாகத் தடைசெய்தல்.
- வடபகுதியில் இழுவைமடித்தொழில் செய்பவர்கள் அதை நிறுத்தி மாற்றுத் தொழிலான வழிவலைத் தொழில் செய்ய ஊக்குவிப்பதுடன், வழிவலை இல்லாதவர்களுக்கு அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் மூலம் கடன் அடிப்படையில் பெற்றுக் கொடுத்தல்.
- கடல் வளங்களை அழித்தும் இனவிருத்தியைக் குறைத்தும் பணவருவாய் பெறும் சட்டவிரோதமான எந்தத் தொழிலையும் எமது மாவட்டத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் செய்யாது நிறுத்துதல்.
- அழிந்துபோன கடல் வளங்களைப் புத்துயிர்பெற வைப்பதற்காகக் கடற்தொழில் சமூகத்தவர்கள் எந்தவகையான தியாகங்களையும் செய்யத் தயாராகுதல்.
- கடல்வள உற்பத்தியைப் படிப்படியாகப் பெருக்கக் கூடிய ஆய்வுகளையும் யுக்திகளையும் கையாண்டு சமூக முன்னேற்றத்தைக் காணுதல்.

மேற்கூறப்பட்டவைகளைச் செய்வதன் மூலம் "வடபகுதிக் கடல்வளங்களை நாமே பாதுகாக்கவேண்டும்."(21)

# ஈராக்கில் கார்க் குண்டுத் தாக்குதல் 40 பேர் பலி! 33 பேர் படுகாயம்!!



ஈராக்கின் மூன்று வெவ்வேறு இடங்களில் நடத் தப்பட்ட கார்க்குண்டுத் தாக்குதல் மற்றும் றொக்கற் தாக்குதல்களில் 40 பேர் கொல்லப்பட்டதுடன், 33 பேர் படுகாயமடைந்தனர்.

முதலாவது தாக்குதல் சுனி முஸ்லிம்கள் பெரும் பான்மையாக வாழும் பாய்ஜி நகரில் இடம்பெற்றது. இதில் 27 பேர் கொல்லப்பட்டதுடன் 3 அமெரிக்கப் படையினர் உட்பட 25 பேர் படுகாயமடைந்தனர். ஈராக் கின் பிரதான எண்ணெய் வளம் நிறைந்த நகரமான பாய்ஜியில் உள்ள சந்தைக்கட்டடத் தொகுதி ஒன்றின் முன்னே இந்தக் கார்க்குண்டுத்தாக்குதல் இடம்பெற்றுள் ளது.

அமெரிக்கப் படையினரின் தொடரணி ஒன்றினை இலக்கு வைத்தே இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப் பட்டபோதும், குறிப்பிட்ட தொடரணி சற்றுநேரத்திற்கு முன்பாக குண்டு வெடிப்பு இடம்பெற்ற இடத்தினைத் கடந்து சென்றுவிட்டதாக அமெக்கப் படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேசமயம் ஈராக்கின் றமாடி நகரில் அமெரிக்கப் படையனருக்கும் ஈராக்கியத் தீவிரவாதிகளுக்கும் இடை யில் இடம்பெற்ற மோதல்களைத் தொடர்ந்து ஈராக்கி யத் தீவிரவாதிகள் மேற்கொண்ட றொக்கற் தாக்கு தலில் 9 ஈராக்கியப் பொதுமக்கள் கொல்லப்பட்டனர். றமாடி நகரில் தொடர்ந்து மோதல்கள் இடம்பெற்று வருவதாகத் தெரிவித்துள்ள செய்தி ஊடகம் ஒன்று இந்தமோதல் சம்பவங்கள் தற்பொழுதும் றமாடி நகரில் பலத்துடன் தீவிரவாதிகள் உள்ளார்கள் என்பதை எடுத்துக்காட்டுவதாகத் தெரிவித்துள்ளது.

இதனிடையே பலூஜா நகரில் தீவிரவாதிகள் தற்பொழு தும் ஒளிந்திருப்பதாகவும் அவர்களை வெளியேற்றும் முகமாக அமெரிக்கப்படையினர் தாக்குதல்களை மேற் கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதே சமயம் ஜோர்தானில் பயிற்சிபெற்று ஈராக்கிற்குத் திரும்பியவேளை ஈராக்கியப் பொலிஸாரின் அணி ஒன்று தீவிரவாதிகளால் கடத்திச்செல்லப்பட்டுள்ளதாக வெளி யான செய்திகள் தொடர்பாக விசாரணைகள் இடம் பெற்றுவருவதாக ஈராக்கிய உள்நாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்தது.

பாக்தாத்தின் மேற்குப் பகுதியில் பொலிஸ் நிலை யத்திற்கருகில் அமெரிக்க இராணுவம் சென்று கொண்டி ருந்தவேளை, நடத்தப்பட்ட கார்க்குண்டுத் தாக்குதலில் இருவர் கொல்லப்பட்டதுடன் ஐவர் காயமடைந்ததாக பொலிஸ் அதிகாரி அகமட் சிகாப் தெரிவித்தார்.

அத்துடன் கிர்குக் நகரிலும் ஆட்சேர்ப்பு நிலைய மொன்றுக்கருகில் இடம்பெற்ற வீதியோரக் குண்டு வெடிப்பில் இருவர் கொல்லப்பட்டதுடன், மூவர் காயம டைந்ததாக கிர்குக்கிற்கான பாதுகாப்பு அதிகாரி ஜென ரல் அன்வர் மொகமட் அமின் தெரிவித்தார்.

இதேவேளை, கிளர்ச்சிவாதிகளால் கடத்தப்பட்ட பின்னர் படுகொலை செய்யப்பட்ட கெயர் நிறுவனப் பணியாளர் மார்க்கிரட் ஹசனின் உடல் பலூஜாவில் கண்டுபிடிக் கப்பட்டுள்ளதாக அவுஸ்ரேலியப் பிரதமர் ஜோன் ஹவாட நேற்று தெரிவித்தார்.

பலூஜாவில் அமெரிக்கப் படையினரால் சிதைவ டைந்த நிலையில் வெளிநாட்டுப் பெண்ணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாகவும் இது ஹசனினுடைய தாக இருக்கவேண்டுமெனவும் அவர் அவுஸ்ரேலிய நாடாளுமன்றில் தெரிவித்தார்.

# பிரான்ஸ் ஜனாதிபதி சிராக் பிரிட்டன் பிரதமருடன் பேச்சு



(லண்டன்)

பிரிட்டனுக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள பிரான்ஸ் ஜனாதிபதி ஜக்சிராக் பிரிட்டன் பிரதமர் ரொனிபிளேயரு டன் நேற்று கலந்துரையாடலை நடத்தியுள்ளார்.

ஈராக் மீதான போரையடுத்து பிரிட் டனுக்கும் பிரான்ஸிற்குமிடையே கருத்து வேறுபாடுகள் நிலவிவந்த போதிலும் இரண்டு நாட்டுத் தலை வர்களும் இதுவரை ஒன்றாக இணைந்தே பணிபுரிவதாக பிரதமர் ரொனி பிளேயரின் பேச்சாளர் தெரி வித்தார்.

இந்த இரண்டு நாட்டுத் தலை வர்களும் ஐரோப்பிய யூனியனின் செயற்பாடுகள், நடைபெறவுள்ள ஜி 8 நாடுகளின் தலைமைப் பதவிக் கான தேர்தல் மற்றும் ஆபிரிக்க, ஆப்கானிஸ்தான் நாடுகளின் தற் போதைய நிலைமைகள் தொடர் பாக கலந்துரையாடினர்.

அத்துடன் ஈராக்கின் தற்போ தைய நிலைமைகள் தொடர்பாக வும் இரு நாட்டுத்தலைவர்களும் கலந்துரையாடியுள்ளனர். இதனை யடுத்து இரு நாட்டுத்தலைவர்க ளும் இணைந்து ஊடகவியலாளர் மாநாடொன்றை நடத்தியுள்ளனர்.

# சீனாவில் குடியேறும் இந்திய கணினி நிபுணர்கள்

(பீஜிங்)

பொருளாதார முன்னேற்றம் வாழ்க்கைத் தரத்தில் ஏற்பட்டுள்ள மேம்பாடு, வலுப்பட்டுவரும் இரு தரப்பு உறவுகள் காரணமாக அதிக ளவு இந்தியர்கள் சீனாவில் குடி யேறி வருகிறார்கள்.

சீனாவில் இதுவரை 2 ஆயிரம் இந்தியர்கள் குடியேறியுள்ளனர். மேலும், நாளுக்குநாள் சீனாவுக்குச் செல்லும் இந்தியர் எண்ணிக்கை உயர்ந்துவருகிறது.

மேறகத்தேய நாடுகளைச் சேர்ந்த கணினி நிபுணர்களைவிட, இந்திய நிபுணர்கள் குறைந்த சம்பளத்துக் குக் கிடைப்பதால் சீனாவில் உள்ள பன்னாட்டு நிறுவனங்கள் இந்தியர் களையே அதிகளவில் வேலைக்கு அமர்த்துகின்றன.

சீன அரசு நிறுவனங்களிலும் ஒரு சில இந்தியர்கள் பணிபுரிகி றார்கள். அவர்களில் நிலேஷ் சர்மா வும் ஒருவர். அவர் ஷெஜியாங் மாகாணத்தில் அரச ஊழியராகச் சேர்ந்த முதல் வெளிநாட்டுக்காரர் ஆவார்.

# இஸ்ரேல் படை தாக்குதல் 3 எகிப்திய படையினர் பலி!

(டெல் அவிவ்)

காஸாப் பிரதேசத்தில் இஸ் ரேலியப் படைகள் மேற்கொண்ட தாக்குதலில் மூன்று எகிப்தியப் படைவீரர்கள் கொல்லப்பட்டுள்ள னர்.

எகிப்தியப் படைவீரர்கள் காஸாப பிரதேசத்தின் கரையோரப் பகுதி யூடாக இஸ்ரேலிய எல்லையினை அண்மித்த வேளையில் இவர்களை பலஸ்தீனத் தீவிரவாதிகளென தவ றாக எண்ணிய இஸ்ரேலியப் படை யினர், டாங்கிகள் மூலம் தாக்குதல் களை நடாத்தியுள்ளனர். இஸ்ரே லியப் படையினரின் தாக்குதலை அடுத்து எகிப்தியப் படைவீரர்கள் மூவரும் ஸ்தலத்திலேயே கொல் லப்பட்டதாக எகிப்திய இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

எகிப்தியப் படையினர்மீது இஸ் ரேலியப் படையினர் தாக்குதல்கள் மேற்கொண்டுள்ளதை ஏற்றுக் கொண்டுள்ள இஸ்ரேலிய பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் சீங் பொயிம், எகிப்திய எல்லைகளினூடாக பலஸ் தீனத் தீவிரவாதிகள் காஸாப்பகு திக்கு ஆயுதங்களைக் கடத்தி வரு வதாகவும், சம்பவதினம் பலஸ்தீ னத் தீவிரவாதிகள் ஆயுதங்களைக் கடத்திச் செல்வதாகக் கருதியே தமது படையினர் தாக்குதல்களை மேற்கொண்டதாகவும் தெரிவித்தார்.

அணமைய காலங்களாக காஸாப் பிரதேசத்தின் தென்பகுதியில் இஸ் ரேலியப் படையினருக்கும், பலஸ் தீனத் தீவிரவாதிகளுக்குமிடை யில் மோதல்கள் இடம்பெற்று வரு வதையும் இஸ்ரேலியப் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் சுட்டிக்காட்டி யுள்ளார்.

இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக இஸ்ரேலிய இராணுவ உயர்மட்டக்குழு ஒன்று விசாரணை களை ஆரம்பித்துள்ளதாக இஸ்ரே லிய படை அதிகாரி ஒருவர் தெரி வித்தார். இஸ்ரேல் மற்றும் எகிப்து ஆகிய நாடுகளுக்கிடையே 1979 ஆம் ஆண்டில் இருந்து சுமுக நிலை நிலவிவருகின்றமை குறிப்பிடத்தக் கது.




# ஒலியை விட பத்துமடங்கு வேகத்தில் செல்லும் ஜெட் விமானம் நாஸா வெற்றிகரமாக பரிசோதனை!


(வொஷிங்ரன்)

ஒலியைவிட பத்துமடங்கு வேகமாகப் பறக்கக் கூடிய ஆளில்லா ஜெட் விமானத்தை அமெரிக்க விண் வெளி ஆராய்ச்சி மையமான நாஸா வெற்றிகரமாகப் பரிசோதித்தது. விண்வெளி ஆராய்ச்சியில் சாதனை கள் செய்யும் அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி மைய மான நாஸா ஒலியைவிட வேகமாகச் செல்லும் ஆளில்லா ஜெட் விமானத்தை தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது.

2001 ஜூனில் இந்த விமானத்தின் முதல் சோதனை நடந்தது. 'எக்ஸ் & 43 ஏ' என்று பெயரிடப்பட்ட முதல் விமானத்தின் சோதனைகள் தோல்வியில் முடிந்தது. கடந்த மார்ச் 7 இல் 2 ஆவது சோதனை வெற்றிகர மாக நடந்தது.

2 ஆவது விமானத்தைவிட வேகமாகச் செல்லக் கூடிய விமானத்தை நாஸா தயாரித்தது. அதன் சோதனை நேற்றுமுன்தினம் நடந்தது. இதன் நீளம் 12 அடி. அகலம் 5 அடி மட்டுமே. அமெரிக்க லொஸ் ஏஞ்சல்ஸ் நகர் அருகே உள்ளது எட்வர்ட் விமானப் படைத்தளம். அங்கு நிறுத்தப்பட்டிருந்த நாஸாவின் "பி & 52" விமானத்தின் இறக்கையில் 'எக்ஸ் & 43 ஏ' பொருத்தப்பட்டவுடன் "பி & 52" விமானம் சீறிப் பாய்ந்து பசுபிக் கடலின்மேல் சென்றது. அப்போது இறக்கையில் இருந்த 'எக்ஸ் & 43 ஏ' ஐ கழற்றி விட்டது. உடனே அந்தக்குட்டி விமானம் நெருப்பைக் கக்கிக்கொண்டு சீறிப்பாய்ந்தது. மணிக்கு 7 ஆயிரம் மைல் வேகத்தில் பறந்தது. பின்னர் கடலில் வீழ்ந்தது. சோதனை வெற்றிபெற்ற மகிழ்ச்சியில் நாஸா விஞ் ஞானிகள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். சோத னையை வெற்றிகரமாக நடத்திவிட்டோம் என்றார் 'எக்ஸ் & 43 ஏ' திட்டத்தின் தலைவர் கிரிப் கார்பெனி.

மணிக்கு 11 ஆயிரத்து 260 கி.மீ. வேகத்தில் செல்லக் கூடிய ஆள் இல்லாத ஸ்க்ராம்ஜெட் விமானத்தை அமெ ரிக்காவின் நாஸா நிறுவனம் நேற்றுமுன்தினம் வெற்றிகர மாகச் சோதனை செய்தது. ஒலியைவிட 10 மடங்கு அதி வேகமாகச்சென்ற இந்த விமானத்துக்கு பூமியைச் சுற்றிவர 5 மணிநேரம் போதுமானது.




சோதனைக்காக பி 52 பி போர் விமானத்தின் றொக் கட் உடன் ஸ்க்ராம்ஜெட் விமானம் எடுத்துச்செல்லப பட்டது. 1 லட்சத்து 10 ஆயி ரம் அடி உயரத்தில் றொக் கட்டிலிருந்து பறந்த விமா னம் முடிவில் கடலில் விழுந் தது. சோதனைக்காகத் தான் போர் விமானம் பயன் படுத்தப்பட்டது. இவ்விமா னம் நடைமுறைக்குவர இன்னும் நீண்டகாலம் தேவைப்படும்.

# தென்கொரிய நாணய மதிப்பு அதிகரிப்பு



(சியோல்)

அமெரிக்க டொலர் மதிப்பு கடந்த சில நாட்களாகக் குறைந்து வருகிறது. அதேநேரத்தில் தென் கொரியாவின் ஒன் நாணய மதிப்பு இதுவரை இல்லாத அளவுக்கு 7 மடங்கு அதிகரித்திருக்கிறது. இதே போல் ஐரோப்பிய யூனியன் நாடு களின் யூரோ நாணய மதிப்பும், ஜப் பானின் யென் நாணய மதிப்பும் அதி கரித்துவருகிறது.

தென்கொரியாவின் சியோல் நக ரில் உள்ள நாணய மாற்று வங்கி யில் அமெரிக்க டொலர் நோட்டுக் களை ஊழியர் ஒருவர் கட்டுக் கட் டாக அடுக்கிவைக்கும் காட்சி.

## சூடான் வன்செயல்களைக் கட்டுப்படுத்த

# ஐ.நா.பாதுகாப்பு சபையின் கூட்டம் கென்ய தலைநகரில் நடைபெறுகிறது



சூடானின் தென் பிராந்தியமான டர்பூரில் நிலவும் வன்செயல்களை கட்டுப்படுத்துவது தொடர்பாக ஐ.நா. பாதுகாப்புச் சபை இரண்டு நாள் கூட்டத்தை கென்யத் தலைநகரான நைரோபியில் நடத்துகின்றது.

ஐ.நாவின் பாதுகாப்புச் சபைக் கூட்டம் அமெரிக்காவின் நியூ யோர்க் நகரில் நடைபெறுவதே வழமையாகும். ஆனால், கடந்த 14 வருடங்களின் பின்னர் முதன்முறை யாக ஐ.நா.வின் பாதுகாப்புச்சபை நியூயோர்க்கிற்கு வெளியே கூடு வது இதுவே முதன்முறையாகும்.

கென்ய தலைநகரை ஐ.நா. பாது காப்புச்சபைக் கூட்டத்திற்குத் தெரிவு செய்யக் காரணம், சர்வதேச நாடு களின் கவனத்தை ஈர்ப்பதற்கா கவே என பி.பி.ஸியின் ஐ.நாவுக் கான செய்தியாளர் சுசானா பிறைஸ் தெரிவித்தார்.

இதனிடையே டர்பூர் பிரதேசத் தில் நிலவும் வன்செயல்களைக் கட்டுப்படுத்த அங்கு உடனடியாகப் பொருளாதாரத் தடைகளை விதிக்க வேண்டுமென ஐ.நாவை - சர்வதேச உதவி நிறுவனங்கள் மற்றும் மனித உரிமை அமைப்புக்கள் வற்புறுத் திக் கேட்டுள்ளன.

கடந்த 21 வருடங்களாக சூடா னில் இடம்பெற்றுவரும் உள்நாட்டு வன்செயல்களை முடிவிற்குக் கொண்டுவரும் வகையில் சூடான் அரசாங்கமும், தென்பகுதி கிளர்ச்சி வாதிகளும் கடந்த இரண்டு வருட மாக பேச்சுவார்த்தை நடத்தியும் எவ்வித முடிவும் காணப்படவில்லை.

இதனிடையே கடந்த செவ் வாய்க்கிழமை அமெரிக்க அதிபர் புஷ், சூடான் ஜனாதிபதி ஓமர் அல் பகீர், மற்றும் தென்பகுதி கிளர்ச்சித் தலைவர் ஜோன் கராங் ஆகியோரி டம் தொலைபேசிமூலம் தொடர்பு கொண்டு சமாதானப் பேச்சுக்கு ஆதரவு வழங்குமாறு கேட்டுள்ளார்.

சூடானில் இடம்பெறும் வன் செயல்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பான சமாதான முயற்சிகள் தொடர்பாக தன்னால் நம்பிக்கை தரக்கூடிய வகையில் எதனையும் தெரிவிக்க முடியாதெனக் கூறிய ஐ.நாவுக்கான அமெரிக்கத் தூது வர் ஜோன்டன்போர்த், ஐ.நா. பாது காப்புச சபை எடுத்திருக்கும் தற்போ தைய நிலைப்பாடு முக்கியத்துவம் வாய்ந்தவையெனத் தெரிவித்தார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# பிரான்ஸ் தூதரக அதிகாரிகள் யாழ். குடாநாட்டுக்கு விஜயம்!



(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கான பிரான்ஸ் தூதரக அதிகாரிகள் குழு நேற்று திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டு யாழ். குடாநாட்டுக்கு வருகை தந்துள்ளது.

இவர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து விமானம் மூலம் பலாலி விமான நிலையத்தை வந்தடைந்தனர். இலங்கைக்கான பிரான்ஸ் அதிகாரிகளான சிலைற் பெடிக், கல்சால் ஆகியோர் அடங்கிய குழுவினர் மதியம் 1 மணியளவில் யாழ். செயலகத்துக்கு வருகைதந்து யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சிவசாமி, புனர்வாழ்வு, புனரமைப்பு திட்டப் பணிப்பளர் சுந்தரம்பிள்ளை ஆகியோரைச் சந்தித்து கலந்துரையாடினர்.

யாழ். மாவட்டத்தில் பிரெஞ்சு மொழி போராட்ட காலங்களுக்கு முன்பு இங்கு கற்பிக்கப்பட்டபோதும் தற்போது பிரெஞ்சு மொழி கற்பிக்கும் செயற்பாடு முற்றாகத் தடைப்பட்டுள்ளது.

தற்போது ஏற்பட்டுள்ள சமாதான சூழ்நிலையில் மீண்டும் பிரெஞ்சு மொழி கற்பிக்கும் செயற்பாடு ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் இந்தக் கற்கை நெறிகளை பல்கலைக்கழகங்களிலும், தனியார் நிறுவனங்களிலும் கற்பிப்பது தொடர்பாகவும் கலந்துரையாடினர்.

இதேவேளை, இவர்கள் நேற்று யாழ். பொது நூலகத்துக்கு சென்று யாழ். பொதுநூலக அதிகாரியையும், பொது அமைப்புக்கள் ஒன்றிய பிரதிநிதிகளையும் சந்தித்துக் கலந்துரையாடினர்.

# தப்பிச்சென்ற கைதி சரணடைந்தார்!

பருத்தித்துறை நீதிமன்றத்துக்கு கொண்டுசென்று விட்டு யாழ்.சிறைச்சாலைக்கு திரும்பும் வேளையில் கடந்த புதன்கிழமை தப்பிச்சென்ற இரண்டு முக்கிய கைதிகளில் ஒருவர் பொலிஸாரிடம் சரணடைந்தார்.

கப்பூது பகுதியில் இடம்பெற்ற பெரும் கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய கைதிகள் இருவர் பருத்தித்துறை நீதிமன்றத்துக்குக கொண்டு சென்றுவிட்டு யாழ். சிறைச்சாலை நோக்கி புறப்படும் நேரத்தில் தப்பிச்சென்றனர்.

இவ்வாறு தப்பிய கைதிகளில் ஒருவரான பழனி சுமன் என்பவரை நேற்று பி.ப 3 மணியளவில் பொலிஸார் தேடிக்கொண்டிருந்தவேளை அவர் பொலிஸாரிடம் சரணடைந்தார்.

சரணடைந்த நபர் பருத்தித்துறை நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார். இவருக்கு முன்பு வழங்கப்பட்ட பிணைகள் அனைத்தும் ரத்துச்செய்யப்பட்டு எதிர்வரும் 30 ஆம் திகதி வரை தடுத்து வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இதேவேளை, தப்பிச்சென்ற கைதி யோகன் தானும் சரணடைவதாக தெரிவித்திருப்பதாகவும் அவரைப் பொலிஸார் தேடிவருவதாகவும் தெரிய வருகிறது.

# அரசியல் போராளிகளின் பாதுகாப்பு; அரசு நடவடிக்கை எடுக்கவில்லை!

## மட்டு – அம்பாறை அரசியற்துறை கண்டனம்

மட்டக்களப்பு - வாழைச்சேனைப் பிரதேசத்தில் தமது போராளியொருவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியற்துறை அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கை வருமாறு-

எமது போராளியான வர்ணரூபன் எனப்படும் மகேஸ்வரன் றொசான் குமார் வாழைச்சேனை- பேத்தாளை கிராமத்தில் வைத்து நேற்முன்தினமிரவு 9.45 மணியளவில் இனந்தெரியாதோரின் கைத்துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி வீரச்சாவை தழுவிக்கொண்டார்.

இந்தச் சம்பவம் அரசின் பூரண கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் நடைபெற்றுள்ளது.

எமது போராளிகளாகிய சேனாதிராஜா, பாவா, யோகா ஆகியோர் அரசியல் வேலைத் திட்டத்தை அரச கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் மேற்கொண்டபோது இனந்தெரியாதோரால் சுடப்பட்டு வீரச்சாவைத் தழுவியிருந்தனர்.

இந்தச் சம்பவங்கள் படைத்தரப்பினரின் பூரண கட்டுப்பாட்டு பிரதேசத்தில் நடைபெற்றுள்ளதால் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அவர்களுக்கு அறிவுறுத்தியிருந்தோம்.

இது சம்பந்தமாக எவ்வித முன்னேற்றகரமான நடவடிக்கைகளும் படைத்தரப்பினரால் மேற்கொள்ளப்படவில்லை என்பது நன்கு தெரியவருகின்றது.

இந்தச் சம்பவம் பற்றி இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு முறைப்பாடு செய்துள்ளோம் என அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது.

## இணையத்தளத்திலும் புலிகளின் குரல்

(கிளிநொச்சி)

புலிகளின் குரல் வானொலி தனது 15 ஆவது ஆண்டில் எதிர்வரும் 21 ஆம் திகதி காலடி பதிக்கவுள்ள நிலையில் இணையத்தளத்திலும் அதன் சேவை வலம்வரவுள்ளது.

கடந்த 14 ஆண்டுகளாக பல்வேறு இடர்களுக்கு மத்தியில் ஒலித்து வரும் புலிகளின் குரல் வானொலி சேவை எதிர்வரும் 21 ஆம் திகதி 15 ஆம் ஆண்டில் காலடி பதிக்கிறது.

இந்த நிலையில் புலிகளின் குரல் வானொலிச் சேவையை புதிய ஆண்டில் **www.pulikalin kural.com** என்ற இணையத்தளம் மூலமும் கேட்கலாம் என்பதனை புலிகளின் குரல் வானொலிச் சேவையினர் அறியத் தந்துள்ளனர்.

## சிறுமி ஒருவரின் சடலம் மலக்குழியிலிருந்து மீட்பு!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு, வாழைச்சேனை பேத்தாளைப் பிரதேசத்திலுள்ள வீடொன்றில் மலசலகூடக் குழியில் இருந்து ஐந்து வயதுச் சிறுமி ஒருவரின் சடலம் மீட்கப்பட்டதாக வாழைச்சேனைப் பொலிஸார் தெரிவித்தனர்.

குமார் லக்கி என்ற சிறுமியின் சடலமே மலசலகூடக் குழியில் இருந்து மீட்கப்பட்டது. சிறுமி தவறுதலாக நீர் நிரம்பிய மலசலகூடக் குழியில் வீழ்ந்ததால் மரணம் சம்பவித்ததெனத் தெரிவிக்கப்படுகிறது.

# கட்சி தாவிய ஐ.தே.க. எம்.பி. உடனடியாக பிரதியமைச்சரானார்

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் அமைச்சரும், குருணாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான றோகித போகொல்லாகம ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தில் நேற்று இணைந்து கொண்டார்.

ஆளும் கட்சியுடன் இணைந்துள்ள றோகித போகொல்லாகமவிற்கு உயர் தொழில்நுட்ப மற்றும் தனியார்துறை வர்த்தக பிரதி அமைச்சர் பதவி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவால் வழங்கப்பட்டுள்ளது.

இவர் நேற்று மாலை 6.30 மணிக்கு ஜனாதிபதி சந்திரிகா முன்னிலையில் உயர் தொழில்நுட்ப மற்றும் தனியார் துறை வர்த்தக பிரதி அமைச்சராகப் பதவியேற்றுக் கொண்டார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தை அமைத்தபோது நாடாளுமன்றப் பொரும்பான்மையை நிரூபிப்பதற்கு 6 ஆசனங்கள் தேவைப்பட்டன.

ஆனாலும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தற்பொழுது 122 நாடாளுமன்ற ஆசனங்களைக் கொண்டுள்ளது.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்த நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்களும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் எட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஹெல உறுமயவின் இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களும் றோகித போகொல்லாகமவிற்கு முன்னர் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்துடன் இணைந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

## அரசியற்துறை...

சம்பவம் இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்தின்போது அலுவலகத்திலிருந்த எவருக்கும் எத்தகைய பாதிப்புக்களும் ஏற்படவில்லை. இருப்பினும் அலுவலகக் கட்டடம் சிறு சேதத்திற்குள்ளாகியது.

இந்தச் சம்பவம் குறித்து இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் புகார் செய்துள்ளதாக விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு- அம்பாறை மாவட்ட ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. காத்தான்குடி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## இராணுவ...

அறிக்கையில், போர்நிறுத்த உடன்பாட்டின் பின்னர் எட்டாவது இராணுவப் புலனாய்வு அதிகாரி வடக்கு - கிழக்கு மற்றும் கொழும்புப் பகுதிகளில் சுட்டுக் கொல்லப்பட்டிருப்பதாகத் தெரிவித்தது.

## புலிகள்...

குழு சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டது.

நெஞ்சிலும் தலையிலும் 4 துப்பாக்கிச்சூட்டுக் காயங்கள் காணப்பட்டதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

விடுதலைப் புலிகளின் தளபதிகளுக்கும் - இராணுவத்திருக்குமிடையேயான சந்திப்பு வவுனதீவில் நாளை இடம்பெறவுள்ள நிலையில் இந்தத் தாக்குதல் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

# அரச ஊழியர்களுக்கு 40 வீத...

அதிகரிக்கப்படவுள்ளது.

குளிர்பானங்கள் மீதான உற்பத்தி 4 வீதத்திலிருந்து 6 வீதமாக உயர்கிறது. துறைமுக மற்றும் விமானக் கட்டணங்கள் 1 முதல் 1.5 வீதத்தால் உயர்கிறது

அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு 6 வீத அனுமான வருமானங்களுக்கு ஏற்ப, முப்பதுவீத வருமான வரி அறவிடப்பட இருக்கின்றது. இதில் வடக்கு - கிழக்கில் பணியாற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு மனிதாபிமான ரீதியில் விலக்களிக்கப்பட இருக்கின்றன.

அரச வெளியீடுகளின் ஆகக் குறைந்த விலை 50 ரூபாவாக இருககும். கணவனை இழந்தவர்களுக்கான கொடுப்பனவு மறுமணமாகினாலும் 50 வீதமாக வழங்கப்படும்.

வரி செலுத்துவோரின் குறைபாடுகளைத் தீர்க்க ஒம்புட்ஸ்மன் ஒருவர் நியமிக்கப்படுவார் போன்ற முன்மொழிவுகளை நிதி அமைச்சர் சமர்ப்பித்திருக்கின்றார்.

குறைந்த மட்டத்தில் உள்ள அரசாங்க ஊழியர்களின் சம்பளம் 70 சதவீதம் அதிகரிக்கப்படும் வகையில் - சகல ஊழியர்களின் சம்பளக் கொடுப்பனவுகள் 40 வீதத்தால் அதிகரிக்கப்படவுள்ளது.

ஏற்கனவே கொடுக்கப்பட்டுவரும் கொடுப்பனவுடன் குறைந்தபட்ச சம்பள அதிகரிப்பு 3250 ரூபாவாகும். அதில் கூடுதலான தொகை 9 ஆயிரம் ரூபாவாக இருக்கும். இந்த அதிகரிப்பு தற்போதைய பொருளாதார நெருக்கடியைக் கருத்தில் கொண்டு இரண்டு கட்டங்களாக வழங்கப்படும்.

சம்பள அதிகரிப்பை உடனடியாக நடைமுறைப்படுத்துவதில் நிதித்தடை இருப்பதால் முதலில் 2500 ரூபா அல்லது முன்மொழியப்பட்ட சம்பள அதிகரிப்பின் 50 சதவீதத்தை அதாவது இதில் எது கூடுதலோ அந்த அதிகரிப்பை 2004 டிசம்பரில் இருந்து வழங்க ஆலோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது அதிகரிப்பு 2006 ஜனவரியில் இருந்து வழங்கப்படும்.

ஓய்வூதியக் கொடுப்பனவுகள் 750 ரூபாவிலிருந்து 1500 ரூபாவாக உயரவிருக்கிறது.

மதுபானம் 15 ரூபாவாலும் பியர் 5 ரூபாவாலும் நேற்று நள்ளிரவு முதல் உயர்கின்றது.

அத்தியாவசிய உணவுப் பொருட்களான அரிசி, பருப்பு, உருளைக் கிழங்கு, மிளகாய், பால்மா மற்றும் மரக்கறி போன்றவற்றுக்கு வற் எனப்படும் பெறுமதி சேர்ந்த வரி 5 வீதமாகக் குறைக்கப்படவுள்ளது.

அரச ஊழியர்களுக்கு விடுமுறைகளைக் கருத்திற்கொண்டு வேலை செய்யும் வேலை நேரம் ஒன்பது மணித்தியாலங்களாக அதிகரிக்கப்பட இருக்கின்றது. இந்த வேலை நேர அதிகரிப்பு காலை அரை மணித்தியாலமும், மாலை அரை மணித்தியாலமுமாக இருக்கும்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு கைத்தொழில் உற்பத்தியை அதிகரிக்க சரியான காலம் இதுவாகும். கிராமிய மக்களுக்கு நலன்கள் எதுவும் செய்யாத நிலையிலேயே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மக்களால் தெரிவு செய்யப்பட்டது.

தனியார் துறையை வலுப்படுத்த உள்நாட்டு வளங்கள் உரிய முறையில் பயன்படுத்தப்படும். 2004 ஆம் ஆண்டில் இலங்கையின் பொருளாதாரம் பாரிய வீழ்ச்சி நிலையில் இருந்து மீள்கின்றது. பொருளாதார வளர்ச்சி 5 இல் இருந்து 5.5 வீதமாக உயர்வடைந்துள்ளது.

அமெரிக்காவுக்கான ஏற்றுமதி 8 வீதம் அதிகரித்துள்ளது. சேமிப்பு 14 வீதமாக அதிகரித்த அதேநேரம் முதலீடு 35 சதவீதம் அதிகரித்துள்ளது.

எரிபொருளின் விலை அதிகரித்துள்ள போதிலும், அதற்காகக் கொடுக்கப்படும் உதவிப் பணம் அரசாங்கத்தால் பெருமளவில் வழங்கப்பட்டு வருகின்றது.

விவசாய அபிவிருத்தி வங்கி ஆரம்பிக்கப்படவிருக்கிறது. இலங்கையில் உள்ள சுமார் 2 லட்சம் முச்சக்கரவண்டிகள் மூலம் நாள் ஒன்றுக்கு 10 லட்சம் பேர் பயணம் செய்கின்றனர்.

இந்த நிலையில் முச்சக்கரவண்டி உரிமையாளர்களுக்கு இந்த வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் நிவாரணம் வழங்கப்படவிருக்கிறது. பொது வாகனங்களைக் காட்டிலும் தனியார் வாகனங்கள் வீதிகளில் அதிகமாகக் காணப்படுவதால் தனியார் வாகனங்களுக்கான வரிமுறையில் திருத்தம் மேற்கொள்ளப்பட இருக்கிறது.

வெளிநாட்டு நேரடி முதலீடுகளை அதிகரிக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன. இலங்கையில் நூற்றுக்கு எட்டு வீத வளர்ச்சியை அடைவது கடினமானது. எனவே அடுத்த மூன்று ஆண்டு காலப்பகுதியினுள் 6 முதல் 7 வீத வளர்ச்சியை எதிர்பார்க்கிறோம்.

கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து கொழும்புக்கு நேரடி கடுகதிச் சேவை ஆரம்பிக்கப்பட இருக்கின்றது. அதே ரயில் சேவை இலாபம் கருதிய சேவையாக மாற்றப்பட இருக்கின்றது.

பெருந்தோட்டத் துறையில் பிரதேச அமைச்சுக்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள 3000 மில்லியன் ரூபாவில் சுமார் 900 மில்லியன் ரூபாவுக்கு தோட்டத்துறையில் வீடமைப்பு, நீர் விநியோகம் மற்றும் மின்சார வசதிகள் செய்து கொடுக்கப்படவுள்ளன.

தோட்டத்துறையில் வறுமையை ஒழிக்க முன்னுரிமை வழங்கப்பட இருக்கின்றது. அதனடிப்படையில் தோட்டத்துறையினருக்கு நாட்டின் ஏனைய துறையினருக்கு ஈடான பொருளாதாரத்தை ஏற்படுத்திக் கொடுக்க அரசாங்கம் தீர்மானித்திருககிறது.

சமாதானத்தின் மூலமே நாட்டின் அபிவிருத்தியை முன்னெடுக்க முடியும் என்ற ஜனாதிபதியின் திட்டத்தின் கீழ் வடக்கு - கிழக்கு புனரமைப்பு மேற்கொள்ளப்படுகிறது. புனரமைப்பு அமைச்சின் ஊடாக வடக்கு - கிழக்குக்கு மாத்திரம் 500 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு மற்றும் மலையகப் பகுதிகள் உட்பட தென்னிலங்கையில் ஆறு மாவட்டங்கள் வறுமை கொண்ட இடங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன. இந்த இடங்களில் உள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பை அதிகரித்து வறுமையை ஒழிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவுள்ளது.

கல்விக்கு 54,280 மில்லியன் ரூபாவும், சுகாதாரத்துக்கு 40480 மில்லியன் ரூபாவும், நாட்டின் உட்கட்டமைப்பு அபிவிருத்திக்காக 55, 479 மில்லியனும், நலன்புரித் திட்டத்துக்கு 32,522 மில்லியன் ரூபாவும், விவசாயத்துக்கு 26,561 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளன.

வருமான அதிகரிப்பில் மறைமுக டீசல் போன்ற மானியங்கள் குறைக்கப்படவுள்ளன என்று நிதி அமைச்சர் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார். (01)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 19.11.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.